ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

30.06.2010 - மலர் 07, இதழ் 17



## 'ரோமப் பேரரசு'

### எழுச்சியும் வீழ்ச்சியும்

### விண்வெளிக்கு பயணித்த விண்வெளி வீரர்கள்

யாழ்.வரலாற்றில்

## சங்கிலி மன்னன்

### வரலாற்றுத் தொடர் ஆரம்பம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாறுவேடம் தரித்த குருவானவர்

தந்தை ஜோசப் வாஸ் அவர்களுக்கு இங்கு வருகை தர மிகவும் சிரமப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் இங்கு தங்கியிருந்த பல்வேறு சந்தர்ப்பங்களில் மாறுவேடம் தரித்தே வெளிவர வேண்டியிருந்தது. அத்துடன், ஒல்லாந்தரிடம் இருந்து உயிர் தப்ப பெரும் துன்பங்களை அனுபவிக்க வேண்டி நேர்ந்தது.

நிலைமை எவ்வாறு இருந்தபொழுதிலும் ஒருவாறாக அவர் கி.பி 1687 இல் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். அங்கு மிக ரகசியமாக கிறிஸ்தவ மதத் திருப்பலிப் (பூசை)யை நடத்தினார். கி.பி 1689 ஆம் ஆண்டு நத்தார் தினத்தன்று அவர் திருப்பலியொன்றை நடத்தவும் ஆயத்தமானார். அத்திருப்பலிக்குப் பெரும் தொகையான கிறிஸ்தவர்கள் ஒன்று கூடினர். ஒல்லாந்தப் போர் வீரர்களுக்கு இச்செய்தி எட்டியதும் அவர்கள் அங்கே விரைந்து சென்றனர். ஒன்று கூடியவர்களை விரட்டி அடித்ததுடன், குருவானவருக்கு உதவினர் எனக் குற்றம் சாட்டி முக்கியமான எட்டுக் கிறிஸ்தவர்களை கைது செய்தனர். அத்துடன், கசையடி கொடுத்து அவர்களை கொடுஞ்சிறையில் இட்டனர். எனினும், தந்தை ஜோசப் வாஸ் அவர்களைக் கைது செய்ய அவர்களால் முடியாமல் போயிற்று.

ஒல்லாந்தருக்குச் சொந்தமான பிரதேசங்களில் தமது சமய நடவடிக்கைகளை இலகுவாகச் செய்யமுடியாது என்பது மட்டும் தந்தை ஜோசப் வாஸ் அவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரிந்தது. அதனால், கண்டி மன்னனிடம் பாதுகாப்புக் கேட்கத் தீர்மானித்தார். உடன் செயற்பட்ட அவர் மன்னனுக்குச் சொந்தமான புத்தளத்திற்குச் சென்று அங்கிருந்து உள்நாட்டை நோக்கிப் பயணமானார். வேஉட என்ற இடத்தை அடைந்ததும் த லெனரோல் என்பவன் தந்தை ஜோசப் வாஸ் அவர்களை சிறைப்பிடித்தான். வேவு பார்ப்பவன் எனக் கூறி சிறைக்கைதியாக அவரை கண்டிக்கு அழைத்துச் சென்றான்.

இரண்டாம் விமலதர்ம சூரியன் மன்னனுக்கோ இக்குருவானவர் பற்றி ஏற்கனவே நன்கு தெரிந்திருந்தபடியால் அவரை விடுதலை செய்தார். இதன்பின்னர் தந்தை ஜோசப் வாஸ் அவர்கள் கண்டியில் தேவாலயம் ஒன்றைக் கட்டினார். இத்தேவாலயம் பின்னர் கிறிஸ்தவ மத்திய நிலையமாக மாறியது. அங்கிருந்துகொண்டு யாழ்ப்பாணம், மாந்தோட்டம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, சீத்தாவாக்கை, ருவன்வெல்ல உட்பட இன்னும் பல இடங்களுக்கு சென்று தனது சமயப்பணிகளை தந்தை ஜோசப் வாஸ் அவர்கள் மேற்கொண்டார். ஒல்லாந்தர்கள் அவரைச் சிறைப்பிடிக்க மேற்கொண்ட முயற்சிகளின்போது அவர் கண்டி இராச்சியத்திற்குத் தப்பிச்சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர்ப்புற மேலதிக ஆசிரியர்கள் பின்தங்கிய பிரதேசங்களுக்கு மாற்றம்


நாட்டின் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, நகரப் பகுதிப் பாடசாலைகளில் தேவைக்கு மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களுக்கு இடமாற்றங்களை வழங்கி, அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.



மேலும், கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியேறுகின்ற ஆசிரியர்களில் அநேகமானோருக்கு இவ்வாறான பின்தங்கிய பிரதேச பாடசாலைகளில் நியமனங்களை வழங்குவதற்கும் கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

விஜய்
Vijey විජය
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# ஆங்கில ஆசிரியர் வெற்றிடப் பரீட்சை



ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 18 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கில மொழிமூலம் பாடங்களைக் கற்பிப்பதற்காக 554 பட்டதாரி ஆசிரியர்களை சேவைக்கு அமர்த்தும் பொருட்டு, நடாத்தப்படவுள்ள இந்த போட்டிப் பரீட்சைக்கு 5,100 பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# நூதனசாலையை பார்வையிடும் நேரம் நீடிக்கப்பட்டுள்ளது



கொழும்பில் அமைந்துள்ள தேசிய நூதனசாலை கடந்த முதலாம் திகதியிலிருந்து வாரத்தின் எல்லா நாட்களும் காலை 9.00 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரை திறந்திருக்கும் என கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் அமைதி நிலை ஏற்பட்டிருக்கும் நிலையில், ஏராளமானவர்களுக்கு நூதனசாலையைப் பார்வையிடுவதற்கான வாய்ப்பினை வழங்கும் பொருட்டே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் எனினும், நூதனசாலையைப் பார்வையிடுவதற்கான நுழைவுக்கட்டணங்களில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.30 மணி வரையே தேசிய நூதனசாலையை பார்வையிடுவதற்காக நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# இல்லந்தோறும் ஒரு நூலகம்

தமது பிள்ளைகளை புத்திஜீவிகளாக ஆக்க வேண்டும் என்றே அனைத்துப் பெற்றோர்களும் விரும்புகின்றனர். இதற்காக வீட்டில் சிறியதொரு நூலகம் இருந்தாலே போதும்; கல்வியின் பக்கம் பிள்ளைகளின் ஆர்வம் இயல்பாகவே அதிகரித்து விடும் என்று அமெரிக்காவின் நெவேடா பல்கலைக்கழகத்தில் சுமார் 20 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த ஆய்வு முடிவொன்று தெரிவிக்கின்றது.

அதன்படி, ஒரு வீட்டில் குறைந்தது 500 புத்தகங்கள் வரை இருப்பின், பிள்ளைகளின் ஆர்வம் புத்தகங்களின் பக்கம் இயல்பாகவே திரும்பி விடும் என்றும், அதுவே பெற்றோர்கள் அறிவுடையோராக இருப்பார்களாயின், அவர்களின் பிள்ளைகள் அறிவில் தேர்ச்சி பெறுவார்கள் என்றும் தெளிவாகியுள்ளது.

இதற்காக சிறிய நூலகம் உள்ள சில வீடுகளும், நூலகம் இல்லாத சில வீடுகளும் தெரிவுசெய்யப்பட்டு, இவ்விரு வீடுகளிலும் உள்ள பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் குறித்து ஆய்வுசெய்யப்பட்டன. இதன்போது, நூலகம் இருக்கும் வீடுகளில் உள்ள பிள்ளைகள் தமது 3-$3^{1/2}$ வயது மட்டங்களிலிருந்தே புத்தகங்களின் பக்கம் தமது கவனத்தைத் திருப்புகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்களின் கல்வித் தரமும் சராசரியாக உயர்ந்து செல்வதும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இல்லந்தோறும் நூலகத்தை ஏற்படுத்தி, சிறந்த புத்திஜீவிகளை உருவாக்க இன்றே வழியமைப்போம்!



# அழகியற்கலை பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள்

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிலவும் அழகியற்கலை பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அழகியற்கலை பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 3,174 அழகியற்கலை ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் அழகியற்கலை பட்டதாரிகள் மூலம் நிரப்பப்படவுள்ளன. எதிர்வரும் நாட்களில் அழகியற்கலை பட்டதாரிகளிடம் விண்ணப்பம் கோரப்பட்டு, நேர்முகப் பரீட்சைகளும் நடத்தப்பட்டு மேற்படி நியமனங்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# உ/தர மாணவர்களுக்கு விஞ்ஞானத்துறை செயலமர்வு

கடந்த 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த (சா/தர) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கு விஞ்ஞானம் தொடர்பான மூன்று நாட்களுக்கான செயலமர்வொன்று நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அடிப்படைக் கல்விக்கான நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள இந்த செயலமர்வு, எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகளும் உள்ளடங்கலாக கடந்த வருடம் சா/தர பரீட்சையில் ஒரே அமர்வில் 9 பாடங்களிலும் சித்தி பெற்று, இந்த வருடம் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கற்று வருகின்ற 150 மாணவர்கள் இந்த செயலமர்விற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு விஞ்ஞானத்துறை சம்பந்தமாக ஆங்கில மொழி மூலமான விளக்கங்கள் அளிக்கப்படவுள்ளதாகவும் அடிப்படைக் கல்விக்கான நிறுவனம் தெரிவித்துள்ளது.

30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.

10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.
எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேளை வாய்ப்பை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20ரூ பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி மனிதனின் உறைவிடங்கள்

ஆரம்பகால மனிதன் வேட்டையாடி வாழ்ந்தாலும் தனது உறைவிடம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி வந்துள்ளான். இதனால், அவன் குகைகளை தனது உறைவிடங்களாக அமைத்துக்கொண்டான். அத்துடன், கற்குகைகள், மரப்பொந்துகள் அடர்ந்த காடுகள் போன்ற இடங்களும் உறைவிடங்களாக இருந்தன. அவ்வாறு ஆரம்பமாகிய உறைவிடங்களே, இன்றைய நவீன கட்டடக்கலை அலங்காரங்களுடன்கூடிய வீடுகளாக வளர்ச்சியடைந்தன.

ஆதிமனிதன் வாழ்ந்த வாழ்விடங்கள் பெரும்பாலும் தற்காலிக வாழ்விடங்களாகவே இருந்தன. வேட்டைத்தொழிலுக்கு சாதகமான காலம் அல்லது சேனைப்பயிரிடலுக்குரிய காலம் வரையில் என்று அவனது ஜீவனோபாயத்திற்கான வசதிகள் இருக்கும் வரையில் மட்டுமே ஓரிடத்தில் குடியிருப்பவனாக இருந்தான். சந்தர்ப்ப சூழ்நிலைகள், தேவைகளுக்கேற்ப அந்த வாழ்விடங்களை மாற்றி வந்துள்ளான்.

'அமேசன்' போன்ற அடர்ந்த வனாந்தரங்களிலும் பாலைவனங்களிலும் ஆர்ட்டிக் போன்ற பனிபடர்ந்த துருவப் பகுதிகளிலும் வீடுகளை அமைத்து வாழ்ந்து வரும் ஆதிவாசிகளை இன்றும் நாம் காணலாம். மனிதனின் பரிணாம வளர்ச்சியுடன், இந்த வாழ்விடங்களின் அமைப்பிலும் அளவிலும் தோற்றத்திலும் அழகிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த வளர்ச்சியையே 'கட்டட நிர்மாணம்' என்று அழைக்கின்றோம்.

மனிதனின் வாழ்க்கைத்தரத்தை அடையாளமிட்டுக் காட்டும் அடையாளச் சின்னமாக இந்த கட்டடக் கலை கருதப்படுகின்றது. இருந்தபோதும் கற்குகைகளிலும் கூடாரங்களிலும் சிறிய வீடுகளிலும் இன்றும் மனிதர்கள் வாழ்ந்து வருவதைக் காணலாம். இந்த வீடுகள் தமது வாழ்க்கை வசதிக்கும் இயலுமைக்கும் காலநிலைக்கும் ஏற்ப அமைக்கப்பட்டவைகளாகும்.

## அடர்ந்த காட்டில் ஆரம்பக் குடியிருப்பு



மரக்கிளைகளை வளைத்து ஒன்றாக இணைத்து, நிழல் தரும் இடங்களாக அமைக்கப்பட்டவையே ஆதி மனிதனின் முதல் குடியிருப்புக்களாக இருந்தன. அடர்த்தியாக வளர்ந்த மரங்களின் நிழல் தரும் இடங்களே இத்தகைய குடியிருப்புக்களாக இருந்தன.

ஆதிமனிதனின் மூதாதையர் என்று கருதப்படும் வானர மனிதன், சிம்பன்சி, கொரில்லாக்கள் நன்கு கிளைபரப்பி வளர்ந்த மரங்களின் கிள்ளகளில் படுத்துறங்கி இரவைக் கழித்ததாகவும் கூறப்படுகின்றது. அந்தவகையில் ஆதிமனிதனும் இயற்கையாக கிடைத்த அருட்கொடையைப் பயன்படுத்தி அதன் நிழலில் வாழ்ந்து இரவைக் கடத்தி வாழ்ந்து வந்தானே தவிர, செயற்கையாக குடியிருப்பு என்று எதையும் அவன் அமைத்து வாழவில்லை.

## மரப்பொந்துகள்




விசாலமாக வளர்ந்த மரங்களில் காணப்பட்ட துளைகளுக்குள்ளும் (பொந்து) ஆதிமனிதன் வாழ்விடங்களை அமைத்து வாழ்ந்து வந்துள்ளான். அவை நிரந்தர வாழ்விடமாக இல்லாவிட்டாலும் இளைப்பாறும் இடமாகவும் இரவைக் கழிக்கும் உறைவிடமாகவும் இருந்துள்ளன.

## சாய்வான கற்பாறைகள்



அடர்ந்த காடுகளில் காணப்பட்ட ஒன்றோடு ஒன்று சேர்ந்த கற்பாறைகளுக்கு கீழும் ஆதி மனிதன் வாழ்ந்து வந்தான். மரநிழலில் வாழ்வதைவிட கற்பாறைகளுக்கு கீழான உறைவிடங்கள் ஆதி மனிதனுக்கு பாதுகாப்பாக இருந்தன.

## கற்குகைகள்



கற்கால மனிதனுக்கு கற்குகைகளே பாதுகாப்பான உறைவிடங்களாக இருந்துள்ளன. உலகின் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பண்டைய கற்குகைகள் இதற்கு சிறந்த சான்றுகளாக உள்ளன. காற்றில் இருந்தும் பனியில் இருந்தும் பாதுகாப்புப் பெறுவதே இக்குகைகளில் வாழ்ந்ததன் நோக்கமாக இருந்தது.

இரவில் குகைகளுக்கு முன்னால் பாரிய அளவில் தீ மூட்டி கடும் குளிரில் இருந்தும் கொடிய மிருகங்களிடமிருந்தும் பாதுகாப்புப் பெற்றுள்ளான். அத்துடன், வேட்டையாடிய மிருகங்களின் மாமிசத்தை நெருப்பில் சுட்டு உணவாகக் கொண்டுள்ளான். மிகுதியை பாதுகாத்து வைத்து உணவுப் பற்றாக்குறை உள்ளபோது அதனைப் பயன்படுத்தி வந்துள்ளான். தானியங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு கற்குகைளைப் பயன்படுத்தினான். இத்தகைய குகைகளுக்குள் காணப்படுகின்ற ஓவியங்கள் அன்றைய மனிதனின் வாழ்க்கை எவ்வாறு இருந்திருக்கலாம் என்பதற்கு சான்றாக இருக்கின்றன.

## நிலக்கீழ் உறைவிடம்



பண்டைய ஐரோப்பாவின் பல பகுதிகளில் நிலத்திற்கு கீழ் அமைக்கப்பட்ட வீடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கடும் பனியில் இருந்து பாதுகாப்பாக வாழ்வதற்கே இவ்வாறான குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

நிலத்திற்கு கீழ் ஓரளவுக்கு ஆழமானதும் அகலமானதுமான குழிகளைத் தோண்டி அதற்கு மேல் மிருகத்தோல்களைக் கொண்டு கூரை அமைத்து இத்தகைய குடியிருப்புக்களை அமைத்துள்ளனர். குடியிருப்பு அமைக்கும்போது பாதுகாப்புக்காக கூரை அமைப்பதன் ஆரம்பம் இதுவாக இருக்கலாம் என்று ஆதி மானிட வாழ்க்கை பற்றிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கடும் குளிர்காலத்தில் உஷ்ணத்தை பெற்று உடல் சமநிலையைப் பேணவே இத்தகைய நிலக்கீழ் குடியிருப்புக்களை அமைத்துள்ளனர்.

## நிலத்திற்கு மேல் முதல் குடியிருப்பு



மரங்களின் கிளைகளை ஒன்றாகக் கோர்த்து இணைத்துக் கட்டி நிலத்திற்கு மேலான தரை வீட்டை முதன்முதல் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். கூரையாக இவ்வாறு அமைக்கப்பட்ட வீட்டில் தடிப்பான புற்களை வெட்டி உலர்த்தி சேர்த்துக்கட்டி மேலும் அழகுபடுத்தி தரையின் மேற்பகுதி வீட்டை அமைக்கும் முயற்சியில் ஆதிமனிதன் ஈடுபட்டுள்ளான். இதில் இரண்டு மரக்கம்பங்களை நிலத்தில் நட்டு அதற்கு மேல் ஒரு கம்பை வைத்துக்கட்டி அதில் இருந்து கூரை அமைப்பில் சரிவாக அமைத்த வீடே முதல் படிமுறையான தரைமேல் வீடாக இருந்திருக்கின்றது.

## கூடாரம்



கற்காலத்திற்கு அடுத்த காலப்பகுதி நாடோடி யுகமாகும். அக்கால மனிதன் மிருகங்களை பழக்கி அவற்றை அடைத்து வைத்து அவற்றில் இருந்து பல், உரோமம், இறைச்சியைப் பெற்று சுய தேவைகளை நிறைவு செய்து ஓரளவு முன்னேற்றகரமான வீடுகளை அமைத்து வாழ்ந்துள்ளான்.

அப்போது அந்த வளர்ப்பு கால்நடைகளுக்கு உணவு தேடி இடத்திற்கிடம் அலைந்து திரிய வேண்டியேற்பட்டது. அதனால், அவன் அமைத்துக்கொண்ட குடியிருப்புக்களும் தற்காலிக குடியிருப்புக்களாகவே இருந்தன. அவை மிருகங்களின் தோலினால் செய்யப்பட்ட, இடத்திற்கிடம் சுருட்டி எடுத்துச் செல்லக்கூடிய குடியிருப்புக்களாக இருந்தன. அந்த குடியிருப்பு முறையே கூடாரங்களாகும். மிகவும் இலகுவான முறையில் அமைத்து இரவைக் கழிப்பதற்கும் ஓய்வெடுப்பதற்கும் ஏதுவாக இந்த குடியிருப்புக்கள் இருந்தன.

## கிராமிய வீடு

கிராம வாழ்க்கை ஆரம்பமானவுடன் வரிச்சுவர் அமைத்து கூரை வேய்ந்து அமைக்கப்பட்ட ஓரளவு பாதுகாப்பான குடியிருப்புக்கள் கிராமிய வீடுகளாகும். பாக்கு, திப்பிலி அல்லது உயரமாகவும் நேராகவும் வளர்ந்த மரங்களை வெட்டி கம்பங்களாக அமைத்து பலமான மண் வீடுகளை ஆமைக்கும் முயற்சி ஆரம்பமாகியது. வீட்டின் சுவர் மண்ணால் அமைக்கப்பட்டது.




கூரை ஓலை அல்லது பண்புல் வேயப்பட்டதாக மழை, வெயில், பனியில் இருந்து பாதுகாப்புப் பெறும் வகையில் ஓரளவுக்கு நீண்டகால பாவனையுடையதாக இருந்தன. வீட்டின் முன்னால் சிறிய குடில் இருந்தது. அதில் கால்நடைகள் கட்டி வளர்க்கப்பட்டன. வீட்டின் உட்பகுதி அறைகளைக் கொண்டிருந்ததோடு, வராந்தாவும் அமைக்கப்பட்டிருந்தது. அனைவரும் அந்த வராந்தாவில் அமர்ந்து உணவருந்துதல், உரையாடுதல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

வீட்டுக்கு வெளியில் கூம்பு வடிவில் தானியங்களைப் பாதுகாக்கும் கொட்டில் அமைக்கப்பட்டிருந்தது. காலப்போக்கில் இவ்வாறான கிராமிய வீடு அழகிய, நவீன வடிவங்களில் உருவாகின. (ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்துறையில் நேர முகாமைத்துவம்



## கல்வி முகாமைத்துவம் - 09

### கற்றலுக்கான ஆலோசனைகள்

'காலம் பொன்னானது' என்ற கூற்றினூடாக காலத்தின் முக்கியத்துவம் வெளிக்காட்டப்படுகிறது. வாழ்க்கை என்பது மனிதன் காலத்தோடு நடத்தும் ஒரு போராட்டமாகும். அந்தப் போராட்டத்தில் அதிகம் பங்கு கொள்ளக்கூடியவர்கள் மாணவ சமூகமே. நேரத்தை சிறப்பாக முகாமைத்துவம் செய்தால் கல்வியைச் சிறப்பாகக் கற்றுக் கொள்ள முடியும்.

நேரம் தொடராக ஓடிக்கொண்டிருக்கிறது. ஓடிச்செல்லும் நேரத்தை வெல்வதில்தான் ஒரு மாணவனின் சாமர்த்தியம் தங்கியுள்ளது. அதன் மூலமே அவன் தன்னுடைய அடிப்படைத் தேவைகளையும் கல்வித் தேவைகளையும் நிறைவு செய்துகொள்ள முடியும். இதனால், அவனது செயற்பாடுகள் யாவும் சிறப்பாக அமையும். கல்வி கற்கின்ற ஒவ்வொரு மாணவரும் நேரத்தை இயன்றளவு பயன்படுத்த வேண்டும். கல்விக்காக செலவழிக்கப்படும் நேரங்கள் யாவும் எப்போதும் மாணவருக்குப் பயன் உடையதாகவே அமையும்.

**நேர முகாமைத்துவம்:**

முக்கியமானதும் விரும்பத்தக்கதுமான பணிகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, தனிப்பட்ட ரீதியில் நேரத்தைப் பயன்படுத்துவதற்கான வழிமுறை ஒன்றைத் திட்டமிடுவதே 'நேர முகாமைத்துவம்' ஆகும். இதில் 'திட்டமிடல்' என்ற கருத்தும் பொதிந்திருக்கின்றது. ஆனால், இங்கு ஒவ்வொரு மாணவரும் எதையும் திட்டமிடுவதற்கு முன்னர் 'முன்னுரிமைப்படுத்தல்' அவசியமாகிறது. செயற்பாடுகள் முழுவதையும் சேகரித்ததன் பின்னர், அவ்விடயங்களைச் சரியான முறையில் முன்னுரிமைப் படுத்தி செயற்படுத்த வேண்டும். அதற்கு நாம் நம்மிடமே இரண்டு வினாக்களைக் கேட்கலாம். அவையாவன:-



1. அது நான் நிறைவேற்ற வேண்டிய ஒன்றா?
2. நான் நிறைவேற்றுவதற்கு விரும்புகின்ற ஒன்றா?

போன்ற வினாக்களை உங்களுக்குள் கேட்டு குறித்த விடயத்துக்கு முன்னுரிமை வழங்கமுடியும். இவ்வாறு முன்னுரிமை அடிப்படையில் திட்டமிட்டு, கல்விச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் ஒரு மாணவன் செயற்படுத்தினால், நேரத்தை சிறந்த வகையில் முகாமைத்துவம் செய்துகொள்ளலாம்.




**நேர முகாமைத்துவத்திற்கான சில ஆலோசனைகள்**

* நேர அட்டவணை ஒன்றை எப்போதும் வைத்திருங்கள்.
* உங்கள் பார்வை அதிகம் படும் இடங்களில் உங்களின் இலக்குகள், நிறைவேற்ற வேண்டிய பணிகள் என்பனவற்றை தடித்த எழுத்தில் எழுதி வைத்துக்கொள்ளுங்கள்.
* நாளாந்தச் செயற்பாடுகள் உங்களின் நீண்ட கால இலக்குகளை மையமாகக்கொண்டதாக இருக்க வேண்டும்.
* வினைத்திறனுடன் கருமமாற்றத் திட்டமிடுதல் வேண்டும்.
* நேரக் கொல்லிகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
* 'இல்லை' என்ற சொல்லை சில நேரங்களில் மட்டும் உச்சரிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் (உதவுவதற்கும் எல்லை உண்டு).
* ஏதாவது ஒரு விடயத்துக்காக காத்துக்கொண்டிருக்கும் வேளையிலும் ஒரு வேலையைச் செய்யுங்கள்.
* மிக முக்கிய வேலைகளுக்கு முதல்நிலை கொடுப்பதோடு, அதில் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.
* படிப்பதற்கு உங்களுக்கு ஏற்ற சூழலைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.
* நேரத்தை ஒழுங்காக முகாமைத்துவம் செய்வதற்காக உங்களை நீங்களே பாராட்டிக் கொள்ளுங்கள்.

**-எம்.ஏ.எஃப்.சப்ரானா**

(தொடரும்....)

★ உனக்கு நேரமிருந்தால் காலத்திற்காக காத்திருக்காதே. -ரோமாஸ்

★ நேரம் என்ற மூலவளம் மிக அரிதானது. அதனை முகாமைப்படுத்த முடியாவிடின், வேறு எந்த ஒரு செயற்பாட்டையும் முகாமை செய்யமுடியாது. -பெடர் ட்ரக்கர்

★ நாங்கள் நேரத்தைக் கவனிப்பதில்லை. ஆனால், அதன் இழப்பைக் கவனத்தில் கொள்கிறோம். -எட்வேட் யஸ்

## ஷ்... உங்களுக்கு மட்டும்!


* மாடுகள் மூக்கின் வழியாகவே வியர்வையை வெளியேற்றுகின்றன.





* எவரெஸ்ட் சிகரம் ஆண்டுக்கு 4 மில்லிமீற்றர் அளவு வளர்கின்றது.
* வௌவால்கள் குகையிலிருந்து வெளியேறும் போது இடது புறமாகத் திரும்பியே பறக்கின்றன.





* ஒரு பென்சிலால் சராசரியாக 56 கிலோமீற்றர் தூரத்துக்கு கோடு வரையலாம்.
* தொலைபேசியை உலகுக்கு அறிமுகப்படுத்திய அலெக்சாண்டர் க்ரஹம்பெல் தன் தாய்க்கும் மனைவிக்கும் தொலைபேசி அழைப்பை எடுத்ததே இல்லை. ஏனெனில், அவர்கள் இருவரும் கேட்கும் திறனை இழந்தவர்கள்.



## நாட்டுக்கு நாடு பொன்மொழிகள்

* உனக்காகப் பொய் சொல்பவன், உனக்கு எதிராகவும் பொய் சொல்வான். **-அமெரிக்கா**
* பொய்யன் உலகத்தை சுற்றிப்போக முடியும்; ஆனால், திரும்பி வர முடியாது. **-போலந்து**
* மௌனம் என்ற மரத்தில் அமைதி என்ற கனி தொங்குகிறது. **-அரேபியா**
* மௌனத்துக்கு நிகரான ஞானமில்லை. **-கிரீஸ்**
* அதிர்ஷ்டமில்லாதவன் உப்பு விற்றால் மழை பெய்கிறது; மாவை விற்றால் காற்றடிக்கிறது. **-ஜப்பான்**
* கெட்ட தந்தைகூட கெட்ட மகனை விரும்புவதில்லை. **-சீனா**
* தீய வழியில் வந்தது, தீய வழியிலேயே போய்விடும். **-இங்கிலாந்து**
* இறந்து கிடக்கும் சிங்கத்தைவிட உயிருள்ள சுண்டெலியே மேலானதாகும். **-ரஷ்யா**
* செயலுக்குப் பின் ஆலோசனை செய்வது அறுவடைக்குப் பின் மழை பெய்வது போலாகும். **-ஜேர்மனி**
* உனக்குப் பகைவன் வேண்டுமா? அப்படியானால் ஒருவனுக்கு கடன் கொடுத்ததை திருப்பிக் கேள். **-பிரான்ஸ்**



## விமானங்களுக்கான 'வைட் பெற்றோல்'

தரையில் ஓடும் வாகனங்களில் பயன்படுத்தும் பெற்றோல்தான் விமானங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது என நீங்கள் நினைத்தால் அது தவறு. சில பயிற்சி விமானங்களைத் தவிர, பயணிகள் விமானங்களில் இப்போது பெற்றோல் பயன்படுத்தப்படுவதில்லை. இது விரைவில் தீப்பற்றிக்கொள்ளும் என்பதால், விமான விபத்தில் சிக்கிக்கொள்பவர்களுக்கு அது பேராபத்தாக அமையும் என்பதே அதற்குக் காரணமாகும்.

எனவே, விரைவில் அல்லது அதிகம் பற்றிக்கொள்ளாத திரவத்தை விமானங்களில் பயன்படுத்த வேண்டும் என்று விஞ்ஞானிகள் யோசித்தனர். இதன் விளைவாக அறிமுகமானதுதான், 'Aviation Turbine Fuel' எனும் எரிபொருள் வகை. இதற்கு வழங்கப்படும் மற்றுமொரு பெயர்தான் 'வைட் பெற்றோல்'.

சாதாரண வாகனங்களில் பயன்படுத்தும் பெற்றோலில் கலந்திருக்கும் ஈயம், கார்பன் போன்றவை இதில் கிடையாது என்பதுதான் இதன் விசேடத்துவமாக இருக்கின்றது. இந்த 'வைட் பெற்றோல்' சில்லறை விற்பனையில் கிடைக்காது. கிலோலீற்றர் அளவுகளில்தான் கிடைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோமப் பேரரசு

ஐரோப்பாவின் கலை, இலக்கிய, அரசியல், தத்துவம் ஆகிய துறைகளில் ரோமப் பேரரசின் செல்வாக்கு அதிகளவில் உள்ளது. ஐரோப்பாவுக்கு மட்டுமன்றி, இதர பல நாடுகளுக்கும் ரோமப் பேரரசின் கொடைகள் பல கிடைத்துள்ளன. ரோம வரலாற்றுக் கதைகளின்படி, ரோமப் பேரரசு 'ரொமியுலஸ்' என்ற பேரரசனால் கட்டியெழுப்பப்பட்டதனால் 'ரோம்' என்ற பெயரைப் பெற்றுள்ளது. ரோம் என்ற பெயர் அந்த அரசனின் பெயரின் அடிப்படையிலேயே தோன்றியுள்ளது.

## ரோமப் பேரரசு

ரோமப் பேரரசின் வரலாறு பற்றிக் குறிப்பிடும்போது பண்டைய இத்தாலி நாட்டின் அமைப்புக் குறித்தும் கவனம் செலுத்துவது அவசியமாகும். மத்திய கடல் பகுதியில் நீண்டு செல்லும் இத்தாலி குடாநாட்டின் கரைப்பகுதியில் ரோம் நகர் அமைந்திருக்கின்றது. இத்தாலியின் வடபகுதி 'அல்ப்ஸ்' மலைத்தொடரினாலும் கிழக்கு அத்திலாந்திக் கடலினாலும் தெற்கு மற்றும் மேற்கு மத்திய தரைக்கடலினாலும் சூழப்பட்டுள்ளது. முன்னர் ரோம் சிறிய ராச்சியமாகவே திகழ்ந்தது. எனினும், இத்தாலியின் வட எல்லையான 'அல்ப்ஸ்' மலைத்தொடரைக் கடந்து பழங்குடி மக்கள் இத்தாலிப் பகுதிகளுக்குள் பிரவேசித்ததால் மக்கள் தொகையும் அங்கு அதிகரித்தது. கி.மு 1800 இல் இந்து ஐரோப்பியர்களான 'இட்டலிக்ஸ்' எனும் பழங்குடியினரைச் சேர்ந்த மக்கள் இத்தாலிக்கு வந்தனர்.

அவர்கள் மத்தியில் இருந்த 'லத்தீன்' என அழைக்கப்பட்ட மக்கள் லெத்தியம் பகுதியில் குடியமர்ந்தனர். இவர்கள் தாம் வசித்த சிறிய பகுதியைச் சூழ மதில்களை அமைத்து பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டனர். இந்தச் சிறிய கிராமத்திற்குள் வர்த்தக நடவடிக்கைகள் பெருகி பின்னைய காலத்தில் அது ரோம் நகர் என்று மாறியது. கி.மு 800 இல் 'எட்ருஸ்கன்' என்று கூறப்பட்ட மக்கள் தொகுதியினரும் இத்தாலி குடா நாட்டில் வசிக்கத் தொடங்கினர். இத்தாலியின் தென் கோடியில் வசித்தவர்கள் கிரேக்கர்கள். இரு நூற்றாண்டு காலம் வரை 'எட்ருஸ்கன்' மக்கள் 'லத்தீன்' மக்களை ஆண்டனர். கி.மு 509 இல் எட்ருஸ்கன் மக்களை விரட்டியடித்த இலத்தீன் மக்கள் ரோம் கூட்டரசை அமைத்துக் கொண்டனர்.

## ரோம் கூட்டரசு

ரோம் கூட்டரசாங்கத்தில் நிலப் பிரபுத்துவ ஆட்சியே நிலவியது. இந்த நிலப்பிரபுக்களை 'பெட்ரிஷியன்கள்' என அழைத்தனர். இவர்கள் மத்தியில் தெரிவு செய்யப்பட்ட 'கொன்சல்' எனப்படும் அதிகாரிகள் இருவருக்கு ரோம் கூட்டரசாங்கத்தின் நிர்வாக அதிகாரம் கிடைத்தது.

## செனட் சபை

ரோமில் மிக முக்கியமான நிறுவனமாக செனட் சபை இருந்தது. பெட்ரிஷியன்கள் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 300 பேர் இதில் சேர்க்கப்பட்டனர். ரோமில் வசித்த சாதாரண மக்கள் 'பிளேபியன்'கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு சிறப்பு நலன்கள் உரிமைகள் எதுவும் கிடைக்கவில்லை. எனினும், அவற்றைப் பெற்றுக் கொள்ள அவர்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. இவர்கள் இதற்காக பல ஆண்டுகளாக பெட்ரிஷியன்களுடன் மோதல்களில் ஈடுபட்டனர். இதன் விளைவாக பெட்ரீஷியன்களுடன் திருமண பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ளவும் அரச பதவிகளை வகிக்கவும் தான்தோன்றித்தனமாக செயற்படும் பெட்ரிஷியன்களுக்கு எதிரான ரோமச் சட்டங்களை உருவாக்கிக் கொள்ளவும் அவர்கள் தலைப்பட்டனர்.


செனட் சபையினால் நிறைவேற்றப்படும் சட்டங்களை சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுக்க 'ட்ரிபுயிலஸ்' எனும் அதிகாரிகளை நியமித்துக் கொள்ளவும் செனட் சபையினால் தடுக்கப்படும் சட்ட திட்டங்களை மீண்டும் விதிக்கும் அதிகாரத்தைக் கொண்ட 'கொமிட்டியா' எனும் அதிகாரிகளை தெரிவுசெய்து கொள்ளவும் பிளேபியன்களினால் இயலுமாக இருந்தது. இதனால், ஜனநாயக ஆட்சி நிலவியது.

## ரோமில் அதிகார விஸ்தரிப்பு

லத்தீன்கள் ரோமில் அரசியல் சங்கம் ஒன்றை அமைத்து தமது எதிரிகளை எதிர்கொண்டனர். குறிப்பாக ரோம் நகருக்கு வெளியில் உள்ள மசிடோனியா ஆகிய பகுதிகளில் இருந்து ரோமுக்கு எதிரான ஆக்கிரமிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. முதலில் லத்தீன்கள் எட்ருஸ்கன்களின் நகர்களைக் கைப்பற்றி, அவற்றில் லத்தீன் அதிகாரத்தை நிலைநிறுத்தினர். பின்னர் ரோமின் வடபகுதியில் உள்ள 'கோல்' எனப்படுவோர் ரோம் மீது தாக்குதல் நடத்தி அதனைத் தீக்கிரையாக்கினர்.

கி.மு 270 இல் இத்தாலியின் அதிகாரம் மிகுந்த நகராக ரோம் நிலவியது. அதன்பின் வட ஆபிரிக்கப் பிரதேசத்தில் இருந்த மிகவும் பலம் பொருந்திய செல்வம் கொழித்த மக்கள் குடியரசான 'கார்த்தேஜ்'எனும் பேரரசின் ஆக்கிரமிப்புக்கு ரோம் உள்ளானது. வடஆபிரிக்கா, ஸ்பெய்ன், மேற்கு சிசிலியா, கோர்சியா, பார்டீனியா ஆகிய விசாலமான பகுதிகள் முழுவதும் கார்த்தேஜ் பேரரசால் விஸ்தரிக்கப்பட்டது.

கி.மு 264 இல் சிசிலியில் 'மெயின்னா' துறைமுகத்தை கார்த்தேஜ் கைப்பற்றியதனால் அவர்களுக்கும் ரோமுக்கும் இடையில் போர் மூண்டது. இந்த போரில் ரோமப்படை வெற்றி பெற்றது. இதனால், கார்த்தேஜ் பேரரசின் மத்திய தரைப்பகுதிகளின் அதிகாரமும் ரோமுக்கு கிடைத்தது. கி.மு 146 இல் ரோம், மசிடோனியாவையும் கிரேக்கத்தையும் கைப்பற்றி அடிமைப்படுத்தியது.



## ஜூலியஸ் சீசர்

ரோமில் வாழ்ந்த புகழ்பூத்த பேரரசர் இவராவார். ரோம் பேரரசாக மாறுவதற்கு முன்பு அவர் கோல் தேசத்தில் (தற்போது பிரான்ஸ்) ஆளுனராகப் பணியாற்றினார். ரோமின் பலத்தை 'ரைன்' கங்கை வரை விஸ்தரிக்க சீசரினால் முடிந்தது.

பொம்ப்பே எனும் ரோம சேனாதிபதியிடம் சீசரின் வெற்றிகள் குறித்து பொறாமை உணர்வு ஏற்பட்டது. கி.மு 49 இல் ஜூலியஸ் சீசர் ரோமுக்குள் நுழைந்தார். அப்பொழுது, பொம்ப்பே மற்றும் பிற செனட் சபை உறுப்பினர்கள் ரோமிலிருந்து தப்பியோடினர். ஜூலியஸ் சீசரினால் எகிப்தில் பொம்ப்பே கொல்லப்பட்டார். எகிப்தில் அப்பொழுது ஆட்சியதிகாரத்தை கிளியோபெட்ரா அரசி நடத்திக் கொண்டிருந்தார். அவருக்கும் ஜூலியஸ் சீசருக்கும் இடையில் நிலவிய நட்புறவு காரணமாக எகிப்தும் ரோமும் நட்பு நாடுகளாகின. ஜூலியஸ் சீசர் ரோமில் விவசாய நடவடிக்கைகளை முன்னேற்றினார். வரிகளைக் குறைத்தார். ஊழல், மோசடி நிறைந்த ஆளுனர்கள், அதிகாரிகள் அவரால் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். அதேபோல் கோல், சிசிரிய ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு ரோமப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. ஜூலியஸ் சீசரின் மற்றுமொரு கொடையாக ஜூலியஸ் நாட்காட்டியைக் குறிப்பிட முடியும். அதில் ஆண்டு ஒன்றில் இருக்கும் நாட்களின் எண்ணிக்கை 365-25. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை அதிக நாட்கள்



ஜூலியஸ் சீசர் பேரரசன்



மார்க்ஸ் அவுரேலியஸ் பேரரசன்




ஆகஸ்டஸ் பேரரசன்



நீரோ பேரரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ின் வரலாறு




இருந்தன. கி.மு 44 இல் ஜூலியஸ் சீசருடன் எதிரியாக இருந்த புரூட்டஸ் எனும் நபர் அவரைக் கொலை செய்தான்.

## ஒகஸ்டஸ் பேரரசு

ஜூலியஸ் சீசருக்கு ஒக்டோவியன் மற்றும் மார்க் அன்டனி என்ற பெயரில் இரு பேரர்கள் இருந்தனர். இவர்கள் இருவரும் சீசரைக் கொன்ற புரூட்டசுக்கு


ரோம நாணயங்கள்


பண்டைய ரோம தேவாலயம்

எதிராகப் போரிட்டதனால் ரோமில் சிவில் யுத்தம் ஏற்பட்டது. இறுதியில் புரூட்டசும் அவனது ஆத்ம நண்பனான கெசியசும் தற்கொலை செய்து கொண்டனர்.

அதன்பின் மார்க் அன்டனி ரோமின் அரசனாகினார்.எனினும், அவரது ஆட்சி பலவீனமாக இருந்தது. இதனால், ஒக்டேவியன் மார்க் என்டனிக்கு எதிராகப் போராடினார். இறுதியில் மார்க் என்டனியும் தற்கொலை செய்துகொண்டான்.

பின்னர் ஒக்டேவியன் ஒகஸ்டஸ் என்ற பெயரில் ரோமின் பேரரசராகினார். அவரின் ஆட்சிக்காலம் 'ரோமின் பொற்காலம்' என்று அழைக்கப்படுகின்றது. அவர் தனக்கு நட்பான நேர்மையான ஆளுனர்களை நியமித்தார். மக்கள் சனத்தொகை பற்றிய கணக்கெடுப்பை நடத்தினார். ரோம் பேரரசு முழுதும் ஒரே அளவில் வரி அறவீடுகளைச் செய்தார். மக்களுக்கு இடர்பாடுகள் ஏற்படும்போது இலவசமாக உணவு, பானங்களை வழங்கினார். பொதுக்கட்டடங்கள், பெருந்தெருக்கள், பாலங்கள், நீர்த்தாங்கிகள், நடன அரங்கங்கள் ஆகியன அவரது ஆட்சிக்காலத்தில் அதிகளவில் அமைக்கப்பட்டன. அவரால் அமைக்கப்பட்டவை

களில் 'கொலொசியம்' விளையாட்டரங்கு, முக்கிய இடத்தை வகிக்கின்றது. இங்கு ஐயாயிரம் பேர் வரையில் ஒருங்கே அமர முடியும்.

## நீரோ பேரரசு

அவ்வளவு சிறந்த பேரரசாகக் கருதப்படாத பேரரசு இதுவாகும். ரோமில் இருந்து கிறிஸ்தவர்களை விரட்டியடிப்பது நீரோவின் நோக்கமாகும். நீரோ பேரரசன் ரோமுக்கு தீ வைத்து அதற்கான பொறுப்பை கிறிஸ்தவர்கள் மீது சுமத்தி அவர்களுக்கு மரண


கொலொசியம் விளையாட்டரங்கு

தண்டனை விதித்தான். ரோம் எரிந்த வேளை அவன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தான் என்று கூறப்படுகின்றது.

## மார்க்கஸ் அவுரேலியஸ் பேரரசன்

கெரகெல்லா எனும் பழக்கத்தை இவர் ரோம் மக்களுக்கு அறிமுகப்படுத்தியதனால் அவர் அரசை 'கெரகெல்லாப் பேரரசு' என்று அழைப்பர். கி. 212 இல் அவர் ரோமப் பேரரசுக்குரிய பகுதிகளில் வசித்து வந்த அனைவருக்கும் ரோமானிய பிரஜாவுரிமையை வழங்கினார்.

## மகா கொன்சன்ஸ்டைன் பேரரசன்

கி.பி 330 இல் இரண்டாகப் பிரிந்திருந்த ரோமை மீள ஒன்றுபடுத்தினார். இவர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக்கொண்ட முதல் பேரரசன் என்ற பெருமையைப் பெறுகின்றார்.

## ரோமச் சட்டங்கள்

ரோமானியர்களினால் உலகுக்கு கிடைத்த மிக முக்கியமான கொடை ரோமச் சட்டங்களாகும். அது கி.மு 150 இல் 12 வாய்ப்பாடுகளால் ஆரம்பமாகியது. இந்த சட்டங்களை ஜஸ்ட்டினியன் பேரரசு (கி.பி 527-565) உருவாக்கினார்.

இதனை 'ஜஸ்ட்டினியன் சட்டங்கள்' என்று கூறுவர். வழக்கு விசாரணை சாட்சிகளை நிரூபித்தல், ஜூரி சபையினால் இறுதித் தீர்மானம் எடுத்தல், குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றம் நிரூபிக்கப்படும் வரை அவரை அல்லது அவளை சுத்தவாளியாக நடத்துதல், சட்டத்தின் முன் அனைவரும் சமம் ஆகியன ரோமச் சட்டங்களின் முக்கிய அம்சங்களாகும். ரோமச் சட்டங்களைப் பின்பற்றிய ஒல்லாந்தர்கள் பின்னர் அச்சட்டங்களை இலங்கைக்கும் அறிமுகப்படுத்தி வைத்தனர். அப்பொழுது இச்சட்டம் உரோம-ஒல்லாந்தர் சட்டம் என்று அழைக்கப்பட்டது.

## ரோமப் பேரரசின் வீழ்ச்சி

மகா கொன்ஸ்டன்டைன் பேரரசனின் மரணத்தின் பின்பு ரோமப் பேரரசு வீழ்ச்சியுறத் தொடங்கியது. ரோமப் பேரரசு வீழ்ச்சியுறக் காரணமாகிய பிரதான காரணிகள் பின்வருமாறு:

- அரச பரம்பரை குறித்த குழப்பமான கொள்கை.
- ரோமப் பேரரசின் புறத்தே இருந்த ஹங், விச்கொத், லொம்பார்டிஸ் ஆகிய பழங்குடியினரால் ரோமப் பேரரசு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டமை.
- படையினர் வசமிருந்த அதிக அதிகாரங்களால் அவர்கள் ஒழுக்கமற்றவர்களாகவும் கீழ்ப்படியாதவர்களாகவும் இருந்தமை.
- சிவில் யுத்தம் காரணமாக தானிய உற்பத்தி குறைந்தமை.
- திறமையற்றவர்கள் பேரரசின் ஆட்சியாளர்களானமை.
- அதிக வரி அறவீடு.
- ஏழை, பணக்காரர் வேறுபாடு அதிகரிப்பு.

## வாணிபம்

ரோம் வாணிபத்திற்குப் பெயர் பெற்றதாகத் திகழ்ந்தது. இதன் பிரதான வர்த்தக நகராக 'அலெக்சாந்திரியா' திகழ்ந்தது. இந்த நகரை அடிப்படையாகக் கொண்டு மத்திய தரைக்கடலைச் சூழ உள்ள நாடுகளுடனும் இந்தியா, சீனா, இலங்கை ஆகிய நாடுகளுடனும் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அனுராதபுரம் காலப்பகுதியில் ரோம் மற்றும் இலங்கைக்கு இடையில் வர்த்தக நடவடிக்கைகள் பரவலாக இடம் பெற்றன.


ரோமானியர்கள் ஆபரணத் தயாரிப்புக்கென முத்துக்கள், மாணிக்கக் கற்கள், யானைத்தந்தங்கள் ஆகியவற்றை இலங்கையில் இருந்து பெற்றுக்கொண்டனர். பட்டுத்துணிகள், வாசனைத் திரவியங்கள், பலவகையான பீங்கான்கள், மருந்து வகைகள் சீனாவிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன. அதேபோல் அவர்கள் சீனா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து பெறப்பட்ட வர்த்தகப் பொருட்களை ஐரோப்பிய நாடுகளுக்கு விற்று பெரும் செல்வத்தை ஈட்டினர். இதன்போது அவர்கள் பெருமளவில் நாணயங்களைப் பயன்படுத்தினர்.

## கலை

கிரேக்கத்தின் தாக்கத்தை ரோமானியக் கலைகளில் காணலாம். அதன் கட்டடக்கலை இதற்கு உதாரணமாகும். ரோம் பாத்தீனன் எனும் தேவாலயத்தில் 142 அடி உயரத்தில் கோள வடிவில் கிரகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ரோமில் உள்ள கொலொசியம் விளையாட்டரங்கு சிறப்பு இடத்தைப் பெறுகின்றது. சித்திரக் கலைக்கும் அது பிரசித்தி பெற்றிருந்தது.

## மக்கள் வாழ்க்கை

குடும்ப அலகு முக்கியம் பெற்றிருந்தது. தந்தை, குடும்பத் தலைவர், பெண்களுக்கு சமூகத்தில் முக்கிய இடம் கிடைத்தது. தாய்க்கு சிறந்த கௌவரம் கிடைத்தது. -(இ)









ரோமானியர்களின் கலைப்படைப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெபொன்


**அரசு:** பல கட்சிக் குடியரசு.
**தேசிய பெயர்:** ரிபப்ளிக் கெபொனய்ஸ் (Gabonese Republic).
**சுதந்திரம்:** பிரான்சிடமிருந்து. 17 ஒகஸ்ட் 1960.





**தேசிய விடுமுறை:** சுதந்திர தினமாகிய ஒகஸ்ட் 17.
**அதிபர்** (2009): அலி பொங்கோ ஒன்டிம்பா.
**பிரதமர்** (2009): போல் பையோகி.

## புவியியல்


ஓகூ நதி

ஆபிரிக்காவின் பணக்கார நாடுகளில் ஒன்றாகிய கெபொன், ஒரு மேற்கு மத்திய ஆபிரிக்க நாடாகும். அட்லாண்டிக் கடற்பரப்பில் அமைந்துள்ள கெபொனின் **கிழக்கு, தெற்கு**-கொங்கோ; **வடக்கு**-ஈக்வடோரியல் கினியா, கெமரூன் ஆகிய நாடுகள் எல்லைகளாக அமைந்துள்ளன. வடகிழக்கே அமைந்துள்ள க்ரிஸ்டல் மலைத்தொடரும் மத்திய சைய்லு மாஸிஃப் எனும் பெரிய மலைத்தொடரும் நாட்டின் குறிப்பிடத்தக்க மலைகளாகும். இங்கு நூற்றுக்கணக்கான பாரிய குகைகள் காணப்படுகின்றன. பல நதிகளும் ஊற்றெடுத்துப் பாய்கின்றன. நாட்டின் மிக நீளமான நதியாக ஓகூ நதி (1200 கி.மீற்றர்) விளங்குகின்றது.

**மொத்தப் பரப்பு:** 103,346 ச.மைல் (267,667 கி.மீ); **நிலப்பரப்பு:** 99,486 ச.மைல் (257,669 ச.கி.மீ)
**தலைநகரமும் பெரிய நகரமும்:** லிப்ரெவில்லே.
**ஏனைய பெரிய நகரங்கள்:** போர்ட் ஜென்டில், ஃப்ரான்ஸிவில்லே.
**உயர் மலை:** இபொன்ஜி மலை (1,574 மீற்றர்); **தாழ் மையம்:** அட்லாண்டிக் சமுத்திரம்.
**சனத்தொகை** (2009): 1,514,993.
**நாணயம்:** CFA ப்ரேங்.
**மொழிகள்:** பிரெஞ்ச் (உத்தியோகபூர்வ மொழி), ஃபேங், மெனி, ஏஸய்பி, பபோனோ/ எஸ்சிரா, பன்ஜாபி.



**இனங்கள்:** பண்டு இனக்குழுக்கள் (இதில் ஃபேங், பூனு, ஸெப்பி, பெடி எனும் நான்கு பெரிய இனக்குழுக்கள் உள்ளடங்குகின்றன). ஏனைய ஆபிரிக்கர்களும் ஐரோப்பியர்களும்-10.8% (இவர்களில் 0.8 பிரான்சியரும் 0.8% இரட்டை தேசிய இனங்களும் அடங்கும்).
**சமயம்:** கிறிஸ்தவர்கள் 55%-75%, இஸ்லாமியர்-1%, ஏனையோர் ஆவி வழிபாட்டினர்.
**எழுத்தறிவு வீதம்:** 63%.
**இணையத்தளக் குறியீடு:** .ga
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 241
**தேசிய சின்னங்கள்:** மரம், மலர், பறவை, மிருகம், விளையாட்டு என எதுவுமே பிரகடனப்படுத்தப்படவில்லை.

**தேசிய கீதம்:**
Uni dans la Concorde et la fraternite
Eveille-toi Gabon, une aurore se leve,
Encourage l'ardeur qui vibre et
nous souleve!
C'est enfin notre essor vers la
felicite.... என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

கெபொனின் ஆரம்பக் குடிகளாக பாபிங்கா, பிக்மிஸ் இனத்தவர்கள் ஏறக்குறைய கி.மு 7000 ஆண்டளவில் வாழ்ந்ததாக நம்பப்படுகின்றது. பிற்காலத்தில் தெற்கு மற்றும் கிழக்காபிரிக்காவில் இருந்து பண்டு இனக்குழுவினர் இங்கு வந்து குடியேறினர். இப்பொழுது பல சாதிக் குழுக்கள் நாட்டில் வாழ்கின்றன. டியாகோ கெம் எனும் போர்த்துக்கேய நாடுகாண் பயணி 1472 இல் கொமோ ஆற்றின் ஆற்று வாய்ப்பகுதியை அடைந்தான். 'ரியோ டி காபோ' என அதற்குப் பெயர் வைத்தான். 'கெபொன் ஆறு' என்பது அதன் அர்த்தமாகும். பின்னர் அதுவே அந்நாட்டின் பெயராக அமைந்துவிட்டது. 1593 இல் ஒல்லாந்தர் இந்நாட்டை அடைந்தனர். 1839 இல் பிரான்ஸியர்கள் இந்நாட்டின் இடது கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றி ஆட்சி புரிந்ததோடு, 19 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் முழு நாட்டையும் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர். 1888 கெபொன் பிரெஞ்ச் ராச்சியத்தின் ஒரு பகுதியாகியது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் பிரெஞ்ச் யூனியனின் குடியரசாகியது.1960 ஒகஸ்ட் 17 சுதந்திர குடியரசாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.


தேசிய இலச்சினை


ஜனாதிபதி


பிரதமர்

## காலநிலை

பூமத்திய ரேகைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு நாடென்பதால், வருடம் முழுவதும் வெப்பமும் ஈரலிப்பும் நிறைந்து காணப்படுகிறது. ஜனவரி மாதத்தில் அதிஉயர் வெப்பம் நிலவும். ஜூன்-ஒக்டோபர் ஆரம்பம் வரை சிறிதளவு மழைவீழ்ச்சி உண்டு. பெப்ரவரி முதல் மே வரை அதிகளவு மழைவீழ்ச்சி காணப்படும்.

## கலாசாரம்


அறிவூட்டும் புராணக் கதைகளுக்கு இந்நாட்டில் பஞ்சமேயில்லை. புராண வாய்மொழிக்கதைகள் 21 ஆம் நூற்றாண்டிலும்கூட நாடெங்கும் பரவியுள்ளது. கெபொனீஸ் இசையானது கொங்கோ ஜனநாயகக் குடியரசு மற்றும் கெமரூன் ஆகிய நாட்டு மக்களின் இசையோடு ஒப்பிடக்கூடிய ஒற்றுமையைக் கொண்டுள்ளது. கெபொன் மக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாறுபட்ட முகமூடிகளை அணியும் பழக்கமுடையவர்கள். குறிப்பாக அவர்களின் பாரம்பரிய வைபவங்களிலும் திருமண நிகழ்வுகளிலும் பிறந்தநாள் வைபவங்களிலும் மரணச்சடங்குகளிலும் தமது கலாசாரத்தைப் பிரதிபலிப்பார்கள்.

வாரம் ஒரு நாடு



தலைநகரின் ஒரு பகுதி


பிரான்ஸிவில்லே விமானநிலையம்


கெபொன் முகமூடிகள்

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2006): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 36,500; செல்லிடத் தொலைபேசிகள்: 764,700. **வானொலி நிலையங்கள்** (2001): AM 6, FM 7, SW 3.
**தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2001): 3. **இணையத்தள வழங்குனர்** (2007): 288; இணையத்தளப் பாவனையாளர்கள்: 81,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகளின் நீளம்:** 814 கி.மீற்றர். **பெருந்தெருக்களின் மொத்த நீளம்** (2004): 9170 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 838 கி.மீ; செப்பனிடப்படாதவை 7626 கி.மீ).
**நீர்வழிப் போக்குவரத்து** (2007): 1600 கி.மீ. **துறையும் துறைமுகமும்:** கெம்பா, லிப்ரெவில்லே, லுசின்டா, ஒவன்டு, போர்ட்-ஜென்டில். **விமான நிலையங்கள்** (2007): 53.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 1%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கொக்கோ, கோப்பி, சீனி, பாம் எண்ணெய், றப்பர், ஆடு-மாடுகள், ஒக்குயுமி (வெப்ப வல மென் மரம்), மீன். **தொழிலாளர் தொகை** (2007): 582,000 (இதில் விவசாயம் 60%, கைத்தொழில் 15%, சேவைகள் 25%). **வேலையற்றோர்** (2006): 21%. **கைத்தொழில்கள்:** பெற்றோலிய அகழ்வு மற்றும் சுத்திகரிப்பு, கனியவளம், கப்பல் பழுதுபார்ப்பு, உணவுற்பத்தி, புடவை, சீமெந்து. **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், இயற்கை வாயு, கனியவளம், மரங்கள். **ஏற்றுமதிகள்:** மசகு எண்ணெய், பெறுமதிமிக்க மரங்கள்.
**இறக்குமதிகள்:** இயந்திரங்களும் இயந்திர உதிரிப்பாகங்களும், உணவுப் பொருட்கள், ரசாயனப் பொருட்கள், கட்டடப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): ஐக்கிய அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், டிரினிடாட்-டுபெகோ, தாய்லாந்து, நெதர்லாந்து, கெமரூன்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

✱ அகண்டா தேசிய பூங்கா ✱ க்ரிஸ்டல் மலை தேசிய பூங்கா ✱ லொபே தேசிய பூங்கா ✱ எக்வாடா கடற்கரை ✱ L'Eglise St-Michel Libreville (மர வேலைப் பாடுகள்) ✱ Marche du Mont-Bouet (தலைநகரின் பிரசித்தி பெற்ற சந்தை) ✱ Musee virtuel des Arts et Traditions du Gabon (கெபொன் பாரம்பரிய நூதனசாலை) ✱ **Palais Presidentiel** கட்டடம் ✱ Pointe-Denis கடற்கரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிரிகளை நடுநடுங்க வைத்த ஜெங்கிஸ்கான்

மொங்கோலியாவின் பெரும்பகுதி தற்போது சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் உரித்தாகிவிட்டது. எனினும், பாரிய நிலப்பரப்பை அது ஆட்சிபுரிந்த காலமும் இருந்தது. 750

**ஜெங்கிஸ்கானின் தந்தையைத் தாத்தாரியர் கொலை செய்ததால் ஒன்பது வயது சிறுவனாகிய அவன் பல தொல்லைகளை அடைந்தான். அத்துடன், தனது ஒன்றுவிட்ட சகோதரனையும் கொலை செய்தான்.**

ஆண்டுகளுக்கு முன் மொங்கோலியப் படை ஜப்பானியருக்கும் ஜேர்மனியருக்கும் அச்சுறுத்தலாகவே இருந்தது. அதற்குக் காரணமாகத் திகழ்ந்தவன்தான் ஜெங்கிஸ்கான் என்பவன். இவன் 1227 ஆம் ஆண்டு, தனது 65 ஆவது வயதில் மரணமடைந்தபோது, அவனின் உடலை திருடர்களிடம் இருந்து பாதுகாப்பதற்காக ரகசிய இடம் ஒன்றில் அடக்கம் செய்யப்பட்டது. இறுதியில், இவனின் இறுதிக் கிரிகைகளில் சமூகமளித்தோரும்



இடத்தைத் தெரிந்து வைத்திருந்தோரும் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். அதனால், ஜெங்கிஸ்கான் அடக்கம் செய்யப்பட்ட இடத்தைப் பற்றிய தகவல் இன்றுவரை கிடைக்கவில்லை.

ஜெங்கிஸ்கான் பரம்பரை 'உலக சர்வாதிகாரிகள்' எனும் கீர்த்தியை ஒரு காலத்தில் பெற்றிருந்தது. டெங்ரி எனும் வானக தெய்வத்தின் கீழுள்ள பூமியின் அனைத்துப் பகுதிகளையும் பரிபாலனம் செய்வோர் தாமே எனக் கூறிக்கொண்ட அவர்கள் அனைத்து இடங்களுக்கும் கொண்டு சென்ற செய்தி, ''எமக்கு அடிபணியுங்கள். இன்றேல் எமக்கு எதிரிகளாகுங்கள்'' என்பதே ஆகும்.

ஜெங்கிஸ்கான் இறக்கும்போது அவனது படை பல நாடுகளை வென்றிருந்தது. நாகரிகமற்ற ஒரு கோத்திரத்தின் பரம்பரையினர் நாகரிகமுள்ள பல நாடுகளை குறுகிய காலத்தில் வென்று நிர்வகித்த நிகழ்வானது இன்றும்கூட உலக மக்களை அதிசயிக்கவே செய்கிறது. நவீன ஆயுதங்களோ, பாரிய படை வலுவோ இன்றி பல மடங்கு பெரிய நாடுகளான சீனாவையும் ரஷ்யாவையும் ஜெங்கிஸ்கான் கைப்பற்றி ஆண்டது எவ்வாறு என்பது தற்போதும் ஆச்சரியமாகவே உள்ளது.

டெமுஜினின் எனும் இயற்பெயரைக் கொண்ட ஜெங்கிஸ்கானின் தந்தையைத் தாத்தாரியர் கொலை செய்ததால் ஒன்பது வயது சிறுவனாகிய அவன் பல தொல்லைகளை அடைந்தான். பின்னர் அவன் தனது ஒன்றுவிட்ட சகோதரனோடு முரண்பட்டு அவனைக் கொன்றான். அது அவன் யுத்தத்துக்கான உணர்வுகளைத் தூண்டிவிட்டது.


தன்னையும் தனது பரம்பரையினரையும் வலுப்படுத்த விரும்பிய அவன், வாட்போர், அம்பெறிதல், ஈட்டி எறிதல், மல்யுத்தம் ஆகியவற்றைப் பயின்றான். அத்துடன், தன்னோடு ஒரு குழுவையும் இணைத்துக்கொண்டு பயிற்சிகளை வழங்கிப் படைகளைத் திரட்டினான். முதலில் தனது தந்தையைக் கொன்றதற்காக தாத்தாரியர் மீதும் தாக்குதல்களைத் தொடுத்தான். இது அவனது சொந்தப் பழி வாங்கல் முயற்சியாகும்.

1206 ஆம் ஆண்டு டெமுஜினின் தனது 44 வயதில், ஜெங்கிஸ்கான் எனப் பெயர் சூட்டப்பட்டுத் தலையில் கிரீடம் அணிவிக்கப்பட்டான். 'உலகின் பாதுகாவலன்' என அர்த்தப்படும் ஜெங்கிஸ்கான் எனும் பெயருடனான அப்பதவியை அரச பிரதானிகளும் உயர் குலத்தோருமே அவனுக்கு வழங்கினர்.

அப்போது, சீனாவில் ஒன்றோடொன்று மோதிக் கொண்டும் முரண்பட்டுக் கொண்டும் மூன்று அரசுகள் இருந்தன. இவற்றை சாதகமாகப் பயன்படுத்திய ஜெங்கிஸ்கான் சீனாவை இலக்கு வைத்தான். அதனால், சீனா மொங்கோலியாவின் முதல் இரையாகியது. சீனரிடம் எண்ணிக்கையிலும் ஆயுத வளத்திலும் பாரிய இராணுவ பலம் இருந்தபோதும் மங்கோலியர்கள் ஜெங்கிஸ்கானின் தலைமையில் சீனரின் பாதுகாப்புத் தளத்தைக் கைப்பற்றி முன்னேறிச் சென்றனர். அவர்களிடம் மூர்க்கத்தனமான துணிகரம் யுத்த தந்திரம் ஒழுங்கான கட்டமைப்பும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல், ஒன்றுபடச் செயற்படுதல் எனும் விசேட இயல்புகளும் காணப்பட்டன.

அத்துடன், இவர்கள்





எதிரிகளை நடுங்க வைக்கும் கொடூர தந்திரங்களையும் செய்தனர்.அவற்றில் ஒன்றுதான் மூலாஹாய் எனும் பிரதேசத்தைக் கைப்பற்றியமையாகும். ஜெங்கிஸ்கான் அந்த நகரை முற்றுகையிட்டபோது பின்வருமாறு அறைகூவல் விடுத்தான். ''சமாதானம் வேண்டுமா? ஆயிரம் பூனைகளையும் பத்தாயிரம் வீட்டுப்பறவைகளையும் அனுப்புங்கள்'' என்று கூறி, பின்னர் அவற்றின் வால்களிலும் இறக்கைகளிலும் துணிகளைக் கட்டி எண்ணெய் வார்த்து தீமூட்டியதாகவும் பீதியடைந்து ஓடிய அந்த விலங்குகளால் அப்பிரதேசமே தீக்கிரையாக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

**''சமாதானம் வேண்டுமா? ஆயிரம் பூனைகளையும் பத்தாயிரம் வீட்டுப்பறவைகளையும் அனுப்புங்கள்'' என்று கூறிய ஜெங்கிஸ்கான் அவ்வாறு அனுப்பப்பட்ட அவற்றின் வால்களிலும் இறக்கைகளிலும் துணிகளைக்கட்டி எண்ணெய் வார்த்து தீமூட்டியதாகவும் பீதியடைந்து ஓடிய அந்த விலங்குகளால் அப்பிரதேசமே தீக்கிரையாக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது**

அந்தவகையில், மத்திய கிழக்கு இஸ்லாமிய அரசுகளுக்கு எதிராக மங்கோலியர் செய்த கொடூரம் மிகவும் பயங்கரமானதாகும். ஒருமுறை ஒடார் பிரதேச ஆட்சியாளன் ஒருவன் 300 மங்கோலியரைக் கொன்றதற்காக அவனது தலைநகரைக் கைப்பற்றிய மங்கோலியர்கள் அவன் காதுகளிலும் கண்களிலும் வெள்ளியை உருக்கி வார்த்தனர். அத்துடன், நீர்ப்பாசனத்தை நாசம்செய்து செல்வத்தில் சிறந்த சமர்கந்தையும் புகாராவையும் சுடுகாடு போல் ஆக்கினர். பாக்தாத்தின் உலகப்புகழ் பெற்ற பல்கலைக்கழகத்தை இடித்துத் தகர்த்ததோடு, இலட்சக்கணக்கான நூல்களையும் எரித்தழித்தனர்.

ஜெங்கிஸ்கான் இறப்பின் பின்னர் அவனது மகன் ஓகொடை ஆட்சி புரிந்தான். அக்காலத்தில்தான் மொங்கோலிய வல்லரசு விரிவாகியது. ஜப்பானும் ஜாவாவும் எதிர்த்துப் போரிட்டதால் மொங்கோலியாவின் பிடியில் இருந்து தப்பின. ஜெங்கிஸ்கான் இறந்து 15 வருடங்களின் பின் வியானா நகரை முற்றுகையிட்டிருந்த மொங்கோலியப் படைகள் ஓகொடையின் திடீர் மரணத்தால் நிலை குலைந்தன.

இதன்பின்னர் 1260 ஆம் வருடம் குப்ளாய்கான் யூஆன் அரச வம்சத்தை ஸ்தாபித்தார். தென்பகுதி சன்க் அரசை கைப்பற்றிய அவரால் 300 ஆண்டுகளாக மூன்றாகப் பிரிந்திருந்த சீனா ஒன்றாகியது. 1294 ஆம் வருடம் குப்ளாய்கான் இறந்ததோடு, சீனா மீண்டும் நிலை குலைந்தது. அவருக்குப் பின் வாரிசு இன்மையால் அதிகாரப்போட்டி தலைதூக்கியது. 11 அரசர்கள் ஆண்டபின் யூஆன் அரச வம்சம் இல்லாமல் போனது. இதன்பின் 1368 ஆம் வருடம் மின்க் அரச வம்சம் அதிகாரத்துக்கு வந்தது.




**ஏ.ஜே.எம்.நிழாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் II (கடந்த வாரத் தொடர்ச்சி.....)

சுட்டெண்: .................................. நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

26. 

இரு உலர் மின்கலங்களும் ஒரு மின்குமிழும் உருவில் காணப்படுகின்றன. மூன்று வயர் (கம்பி)த் துண்டுகளை மாத்திரம் பயன்படுத்தி, மின்குமிழை ஒளிரச் செய்வதற்கு உலர் மின்கலங்களையும் மின்குமிழையும் தொடுக்க வேண்டிய விதத்தை வரைக.

★ *பின்வரும் கலைத்துவப் படைப்புகளின் பெயர்களை எழுதுக.*

27.  ..............................

28.  ..............................

★ *இலங்கையின் பாரம்பரிய விளையாட்டுகளின் பெயர்களை எழுதுக.*

29.  ..................

30.  ..................

★ *பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை எழுதுக.*

31.  ..............................

32.  ..............................

33. 436 தோடம்பழங்கள் 4 பெட்டிகளில் சமனாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஒரு பெட்டியில் எத்தனை தோடம்பழங்கள் உள்ளன? (..............................)

34. 1kg சீனியின் விலை ரூபாய் 60.00 ஆகும். 1kg 250g சீனியின் விலை யாது? (..............................)


35. மீனாவிடம் 1013 முத்திரைகள் உள்ளன. றோசியிடம் 1030 முத்திரைகள் உள்ளன. இருவரிடமும் முத்திரைகளின் எண்ணிக்கை சமனாவதற்கு மீனாவிற்கு இன்னும் எத்தனை முத்திரைகள் தேவை? (..............................)

36. போத்தல் ஒன்று 1l 300ml நீரைக்கொள்ளும். இவ்வாறான 4 போத்தல்கள் கொள்ளும் நீரின் கனவளவு யாது? (..............................)

37. கூட்டுக. $\frac{2}{5}+\frac{3}{10}=$

38. பாடசாலை ஒன்றிற்கு வந்த மார்க்கங்களின் விபரங்கள் அட்டவணையில் உள்ளன. இத்தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| பயண வகை | மாணவர் விபரம் | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| கால்நடை | 45 | 60 |
| பஸ்வண்டி | 35 | 45 |
| துவிச்சக்கர வண்டி | 30 | 40 |
| புகைவண்டி | 20 | 25 |





I. பஸ்வண்டியின் மூலம் வந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
..............................................................................

II. துவிச்சக்கர வண்டியின் மூலம் வந்த ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கை யாது? ..............................................................

III. கால்நடையாக வந்த மாணவர்களின் எண்ணிக்கைக்கும் போக்குவரத்துச் சாதனங்கள் மூலமாக வந்த மாணவர்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது? ..............................................................


IV. எல்லா மார்க்கங்களிலும் வந்த ஆண்பிள்ளைகளை மேலே தரப்பட்ட வரைபில் குறித்துக் காட்டுக.

39. 


இச்சதுரத்தின் பரப்பளவு 1 சதுர சென்ரிமீற்றர் ஆகும்.



நிழற்றப்பட்ட உருவின் பரப்பளவு யாது?
..................................

40. 

நிழற்றப்படாத பகுதியை பின்னமாகத் தருக.
..................................





41. ஆகாய விமானமொன்று 07.45 இற்கு கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு இலங்கை நேரம் 10.15 இற்கு புதுடில்லியை அடைந்தது. அப்பயணத்திற்கு எடுத்த காலம் எவ்வளவு? ..............................

42. 

(i) இவ்வுருவில் தட்டையான பக்கம் (முகங்கள்) எத்தனை? ..............................................

(ii) இவ்வுருவின் வளைந்த விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..............................................

43. 

(i) செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
..............................................

(ii) செங்கோணத்திலும் குறைந்த கோணங்களின் எண்ணிக்கை யாது? ..............................

44. ரஜீவன் வீட்டிலிருந்து தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தபோது திடீரென இடி மின்னலுடன் பெரும் மழை பெய்கின்றது..........; நீர்தான் ரஜீவன் எனின், இச்சந்தர்ப்பத்தில் நீர் செய்யவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி ஆறு வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களேனும் இடம்பெறுதல் வேண்டும். இவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமாக இருத்தல் வேண்டும்)

..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................

## வினாத்தாள் II இன் விடைகள்

*(ஜூன் 23, 30 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

01. (1) காலைக்காட்சி (2) ஆதவன், கதிரவன் (3) கொண்டை, கரிய
(4) செம்மை+தாமரை (5) நிமிடங்கள் (6) அங்குமிங்கும்
(7) சலசல
(8) (அ) கழனி, பழன், புலம், மருதநிலம், கமம் (ஆ) வாவி, பொய்கை, ஏரி
(9) உழவுத் தொழில், விவசாயம் (10) கோரை, முள்ளி, நெற்சப்பி

02. (1) மந்திக் (2) குறுகுறுக்கும்

03. (1) பிரதீபனும் குமாரும் ஓடி வந்தனர். (2) புலவர், பாரியைப் புகழ்ந்து பாடினார்.

04. (1) உதவி செய்தல்/உதவுதல் (2) மனம் நோகப் பேசுதல்

05. (1) காய்ச்சல் (2) சவர்க்காரம்

06. (1) எல்லை கடந்த ஆசை துன்பம் தரும்.
(2) கோபம் ஒருவனுக்கு தீமையை ஏற்படுத்தும்.


07. (1) Rabbit (2) Football (3) Bicycle

08. (1) பந்தை எறி/பந்தை வீசுங்கள் (2) பிறந்தநாள் வாழ்த்துக்கள் (3) நன்றி


09. புகையிரத நிலையம்

10. கதாவ லியன்ன

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. 2 | 12. 1 | 13. 3 | 14. 3 | 15. 4 | 16. 3 |
| 17. 4 | 18. 2 | 19. 2 | 20. 2 | 21. 4 | 22. 3 |
| 23. 2 | 24. 3 | 25. 3 | | | |

26. 

27. யாப்பகுவ சிங்கம் 28. செசத் 29. தாயம் போடுதல்
30. சடுகுடு 31. தம்பட்டம் 32. உடுக்கு
33. 109 34. ரூபாய் 75.00 35. 17 முத்திரைகள்
36. 5l 20ml 37. $\frac{2}{5}+\frac{3}{10}=\frac{4}{10}+\frac{3}{10}=\frac{7}{10}$

38. I. 80
II. 30
III. 90
IV. 

39. 5 சதுர சென்ரிமீற்றர் 40. $\frac{2}{6}$ 41. 2.30 மணி

42. (i) 2
(ii) 2

43. (i) 2
(ii) 5

44. கட்டுரை-தலைப்புக்குப் பொருத்தமான வாக்கியங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யானைகள் Vs மனிதர்கள்



**அண்மைக்காலமாக இலங்கையின் எல்லைக் கிராமங்கள் உட்பட்ட சில கிராமங்களில் காட்டு யானைகளின் சஞ்சாரமும் அட்டகாசமும் அதிகரித்திருப்பதை ஊடகங்கள் வாயிலாக நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதனால், அப்பகுதிவாழ் மக்களின் நாளாந்த வாழ்க்கை பெருமளவில் பாதிப்படைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அத்துமீறிக் கிராமங்களுக்குள் பிரவேசிக்கும் யானைகள் மக்களின் விவசாய நிலங்களையும் வீடு வாசல்களையும் பாரிய சேதங்களுக்கு உட்படுத்துகின்றன. தவிர, யானைகளின் தாக்குதல்களுக்கு ஆளாகி பல மனித உயிரிழப்புகளும் நேர்ந்திருக்கின்றன என்பதும் கவலைக்குரிய விடயமாகும்.**

யானைகளிடமிருந்து தமது சொத்துக்களையும் உயிர்களையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு பாதிக்கப்பட்ட மக்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர். வனவிலங்குகள் அதிகாரிகளுக்கும் இது பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது. கிராமங்களுக்குள் நுழையும் யானைகளால் மக்களுக்கு எந்தவித சேதமும் ஏற்படாதவண்ணம் அவற்றை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டிய பொறுப்பு ஒருபுறம்; இந்த நடவடிக்கையின்போது யானைகளுக்கு எந்தவொரு ஆபத்துக்களும் ஏற்படாதவண்ணம் சூட்சுமமாக திட்டங்களைக் கையாளவேண்டியது மறுபுறம் என இரண்டு படகில் கால்வைத்த நிலை.

எவ்வாறாயினும், தொடர்ந்து கிராமங்களுக்குள் நுழைந்த தொல்லை கொடுக்கும் யானைகள் பற்றிய செய்திகள் குறைந்தபாடில்லை. அதேவேளைகளில் கிராமங்களுக்குள் நுழையும்போது எதிர்கொள்ளும் தவறுதலான, எதிர்பாராத சம்பவங்களுக்கு உட்பட்டு உயிரிழந்த யானைகள் பற்றிய செய்திகள் அறியக்கிடைக்காமலும் இல்லை.

## யானைகளின் வருகைக்கான காரணங்கள்

காடுகள் அழிக்கப்படுகின்றமையே இந்த துர்சம்பவங்களுக்கான பிரதான காரணமாக இருப்பதாக யானைகள் தொடர்பான விலங்கியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். காடுகளே யானைகளின் பிரதான வாழ்விடமாகும். மனிதக் குடியிருப்புக்கள், பயிர்ச்செய்கை உட்பட மற்றும் பல்வேறு தேவைகளுக்காகவும் சட்டவிரோத செயல்களுக்காகவும் காடுகள் ஆக்கிரமிக்கப்படுவதாலும் அழிக்கப்படுவதாலும் யானைகளின் இருப்பிடங்களும் அழிக்கப்படுகின்றன. இதனால், அவற்றின் உணவு, நீர் போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இவ்வகையான காரணங்களினால், மேற்படி கிராமப் பகுதிகளை யானைகள் நாடி வரவேண்டியநிலை ஏற்படுகின்றது. இவ்வாறு வரும்போது விளைநிலங்களில் பயிரிடப்படுகின்ற பயிர்கள் நாவுக்கு சுவையளிப்பதாக அமைகின்றன. எனவே, தொடர்ந்து அவ்வாறான இடங்களை நோக்கி அவற்றின் வருகை அமைகின்றது.

இந்த வருகையின் போதான இடையூறுகளாக, மனிதக் குடியிருப்புகள் விளங்கும்போது யானைகள் அவற்றுடன் மோதுகின்றன. இதனால், யானைகள்-மனிதர்களுக்கு இடையே மோதல் நிலை ஏற்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான பல்வேறு சம்பவங்களினால் மனிதர்கள் பலர் தமது உறவினர்களை இழக்க வேண்டியநிலை ஏற்படுவதோடு, உடற்பாதிப்புகளுக்கும் ஆளாகின்றனர். மறுபுறம் யானைகளிலும் உயிர் சேதங்கள் ஏற்படுவதோடு, அவை உடல் உபாதைகளுக்கும் ஆளாகின்றன.

## தடுப்பதற்கான வழிவகைகள்

காட்டு யானைகளின் வாழ்விடங்களைப் (காடுகளை) பாதுகாப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். காடழிப்பு, காட்டினுள் சட்ட விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பனவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும். இதனால், அவற்றுக்குத் தேவையான உணவு, நீர், வாழ்விடம் என்பன பேணப்படும். இதன்போது குடியிருப்புகளை நோக்கி யானைகளின் வருகை கட்டுப்படுத்தப்படலாம். அத்துடன், எல்லைக்குள் பிரவேசிக்கும் யானைகளை குழப்பமடையச் செய்யும் நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும்.

காடு-குடியிருப்பு எல்லைகளை நிர்ணயித்து பாதுகாப்பு அரண்களை அமைக்கலாம். தற்போது இதன் ஒரு கட்டமாக மின்வேலிகளை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனினும், மனிதன், யானை ஆகிய இருதரப்பு உயிர்களுக்கும் இதனால் ஆபத்து நேரலாம். எனவே, யானைகளை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கவும் இந்த பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வினை பெறவும் விலங்கியல் அதிகாரிகள், குடியிருப்பாளர்கள், யானைகள் தொடர்பான நிபுணத்துவ அதிகாரிகள் இணைந்து கலந்தாலோசித்து உரிய, சிறந்த நடவடிக்கைகளை எடுக்கலாம்.



# விசேட மருத்துவமனை



பல்வேறு சூழ்நிலைகளினால் அனாதரவாக விடப்படும் பொதுமக்களுக்கு மறுவாழ்வளிக்கும் (பாதுகாப்பு, புகலிடம், பராமரிப்பு, சுகவாழ்வு போன்று) அரச, அரச சார்பற்ற நிலையங்கள் இருப்பது போலவே, யானைகளுக்கும் மறுவாழ்வளிக்கும் நிலையங்கள் உலகளவில் இருக்கின்றன. இதற்கு சிறந்த உதாரணமாக இலங்கையில் பின்னவளை யானைகள் அநாதை இல்லத்தைக் குறிப்பிடலாம். அவ்வாறே, தாய்லாந்தில் யானைகளுக்கு என விசேட மருத்துவமனை ஒன்று இருக்கிறது. 'ஆசிய யானைகளின் நண்பர்கள்' என்ற அமைப்பால் நடாத்தப்படும் இந்த மருத்துவமனை, வடக்கு தாய்லாந்தின் லாம்பாங்க் மாகாணத்தில் உள்ளது. பார்வைக் கோளாறு, வயிற்றுப் போக்கு என மனிதர்களைப் போலவே யானைகளுக்கு வரும் சாதாரண பிரச்சினைகளிலிருந்து துப்பாக்கி குண்டுகள், கண்ணிவெடிகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு இலக்காகும் யானைகளுக்கு சிகிச்சை வழங்குவதோடு, சகல வசதிகளும் இங்கு உண்டு.



அத்துடன், இந்த மருத்துவமனையின் மற்றுமொரு மைல்கல்லாக அங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள யானைகளுக்கு செயற்கைக் கால்கள் பொருத்தும் பணியினைக் குறிப்பிடலாம். பெரும்பாலும் போர் சூழல் அல்லது பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகள் என்பனவற்றின் போது காடுகளில் ஏராளமான கண்ணிவெடிகள் புதைக்கப்படுகின்றன. மனிதர்கள் மட்டுமன்றி, விலங்குகளும் இவற்றில் சிக்க நேர்கிறது. அதன்படி, கண்ணிவெடியை தவறுதலாக மிதித்து கால்களை இழந்த யானைகள் ஏராளம். அவற்றை இங்கு கொண்டுவந்து செயற்கைக் கால்களைப் பொருத்தி, இயன்றளவு பழைய வாழ்க்கையை அவற்றுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் பணிகள் இந்த அமைப்பினால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி சென்



*அமெரிக்காவின் 'அப்பலோ 11' விண்வெளி ஓடம் விண்வெளியை அடைந்து 40 ஆவது ஆண்டினை கடந்த வருடம் நிறைவு செய்தமை நீங்கள் அறிந்ததே.*

*அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தது 1960 ஆம் ஆண்டிலாகும். எனினும், சந்திரனில் முதன்முதல் தடம் பதிப்பதில் 1969 ஆம் ஆண்டில் அமெரிக்கர்களே வெற்றி கண்டனர். 1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி 'ஈகல்' எனும் சந்திர ஓடத்தில் பயணித்து முதலில் சந்திரனில் காலடியை வைத்தவர் நீல் ஆம்ஸ்ட்ரோங் ஆவார். அவருக்கு உதவியாக இருந்து இரண்டாவதாக காலடி வைத்தவர் எட்வின் ஒல்ட்ரின் ஆவார். அவர்கள் இருவரும் சந்திரனில் இருந்து திரும்பி வரும்வரை அவர்கள் பயணித்த 'கொலம்பியா' என்ற விண்ணோடத்தை சந்திரனின் சுற்றுப்பாதையில் தக்க வைத்துக்கொண்டிருந்தவர் மைக்கல் கொலின்ஸ் ஆவார்.*

*நாஸாவின் ஒன்பது அப்பலோ விண்வெளிப் பயணங்களின் ஆறு சந்தர்ப்பங்களில் மனிதர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். நீல் ஆம்ஸ்ட்ரோங், எட்வின் ஒல்ட்ரின் ஆகியவர்களைத் தவிர, வேறு பல விண்வெளி வீரர்களும் சந்திரனில் காலடி வைத்துள்ளனர். இன்னும் சிலர் சந்திரனின் சுற்றுப்பாதையில் வலம் வந்து பின்னர் பூமியை வந்தடைந்துள்ளனர். அவர்களில் ஐவர் இன்றளவில் இவ்வுலக வாழ்வை நீத்துள்ளனர். அந்தவகையில், தம் உயிரைத் துச்சமாக மதித்து சவால்களுக்கு முகங்கொடுத்த விண்வெளி வீரர்களில் ஒரு சிலரையும் அவர்கள் இப்பொழுது என்ன செய்கிறார்கள் என்பதையும் தெரிந்துகொள்வோம்.*

## எட்வின் ஒல்ட்ரின் - வயது 80


**'அப்பலோ 11' விண்வெளிஓட செலுத்துனர்.**

**விண்வெளி வாழ்க்கை**

'அப்பலோ 11' விண்வெளிப் பயணத்தின்போது சந்திரனில் காலடி வைத்தவர். பூமியின் சுற்றுப்பாதையில் வலம்வர சந்தர்ப்பம் கிடைத்தது. 'ஜெமினி 12' விண்வெளிச் செயற்பாட்டின்போது விண்வெளியில் உலா வந்தார்.

**பொது வாழ்க்கை**

எழுத்தாளர், பல்கலைக்கழக விரிவுரையாளர், 'ஷெயார் ஸ்பேஸ்' எனும் தனியார் விண்வெளிப் பயணம் தொடர்பான ஆலோசனைக் குழுவின் தலைவராகச் செயற்படுகிறார்.



நீல் ஆம்ஸ்ட்ரோங், எட்வின் ஒல்ட்ரின் (இடது), மைக்கல் கொலின்ஸ் (நடுவில்) ஆகியோருடன் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ஒபாமா.

## வில்லியம் எண்டர்ஸ் - வயது 76

**'அப்பலோ 8' விண்வெளிக் கப்பல் செலுத்துனர்.**



**விண்வெளி வாழ்க்கை**

விண்வெளிப் பயணத்தில் ஒரு முறையே ஈடுபட்டார். சந்திரனின் சுற்றுப்பாதையில் 'அப்பலோ 8' விண்ணோடத்தில் முதன்முதலில் வலம் வந்தவர் என்ற புகழைப் பெற்றார். இந்த விண்ணோடம் 1988 ஆம் ஆண்டு நத்தார் தினத்திற்கு முன்தினம் பூமியை வந்தடைந்தது.

**பொது வாழ்க்கை**

பல நிறுவனங்களில் தொழில் புரிந்தார். இறுதியாக, ஜெனரல் டைனமிக்ஸ் நிறுவனத்தின் தலைவராகப் பணியாற்றினார்.

## ஜேம்ஸ் லொவெல் - வயது 82

**'அப்பலோ 13' இன் கட்டளையிடும் அதிகாரி.**



**விண்வெளி வாழ்க்கை**

விண்வெளியில் காலடி வைக்கும் சந்தர்ப்பம் தவற விடப்பட்டது. கோளாறு ஏற்பட்ட 'அப்பலோ 13' விண்ணோடத்தை ஆபத்தின்றி மீண்டும் பூமிக்குக் கொண்டுவந்து சேர்க்க இவரால் முடிந்தது. 'அப்பலோ 8' பயணத்தின்போது சந்திரனின் சுற்றுப்பாதையை சென்றடைந்தார்.

**பொது வாழ்க்கை**

எழுத்தாளர், புகழ் பெற்ற பேச்சாளர், சினிமா ஆலோசகர். மின்சாரத் தொழில் துறையில் முக்கிய பதவியினை வகித்தவர். சமையற் கலைஞரான மூத்த மகனுடன் இணைந்து லேக் இலினோய்-ஃபொரஸ்ட் நகரில் போசனசாலை ஒன்றை நடாத்துகிறார்.

## எலன் பின் - வயது 78

**'அப்பலோ 12' இன் செலுத்துனர்.**



**விண்வெளி வாழ்க்கை**

சந்திரனின் 'புயல் சமுத்திரம்' எனப்படும் (வலயத்தில்) இறங்கினார். கொன்ரட் எனும் சக விண்வெளி வீரருடன் சந்திரனில் காலடி வைத்தார். பின்னர் 'ஸ்கைலெப்' விண்வெளித் தரிப்பிடத்தின் கட்டளை அதிகாரியாகவும் செயற்பட்டார்.

**பொது வாழ்க்கை**

சந்திரனையும் அங்கு சென்றோரினதும் படங்களை வரைவதில் வாழ்நாட்களைச் செலவிட்டார். வொஷிங்டன் நகரில் அவை காட்சிக்கு வைக்கப்பட்டன.

## நீல் ஆம்ஸ்ட்ரோங் - வயது 79

**'அப்பலோ 11' இன் தலைவர்.**

**விண்வெளி வாழ்க்கை**

சந்திரனில் முதன்முதலில் காலடி வைத்தவர். ஜெமினி 8 பயணத்திற்குத் தலைமை தாங்கியவர். விண்ணோடத்தில் கோளாறு ஏற்பட்டுக் கட்டுப்படுத்த முடியாதிருந்த நிலையிலும்கூட அதனைப் பாதுகாப்பாகத் தரையிறக்கினார்.

**பொது வாழ்க்கை**

சின்சினாம் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பாடநெறிப் பேராசிரியர். '(ச்)செலன்ஜர்' விண்ணோடத்தின் அழிவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு உதவினார்.




விண்வெளி வீரர்களான (இடமிருந்து வலமாக) வோல்டர் கனிங்ஹம் (அப்பலோ 7), ஜேம்ஸ் லொவெல் (அப்பலோ 8, 13), டேவிட் ஸ்கொட் (அப்பலோ 9, 15), ஒல்ட்ரின் (அப்பலோ 11), சார்ள்ஸ் டூக் (அப்பலோ 16), தோமஸ் ஸ்டெஃபார்ட் (அப்பலோ 10), யூஜின் சர்னன் (அப்பலோ 19, 17) ஆகியோர் நாஸா நிறுவனத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டபோது...

## ஃப்ரேங்க் போமன் - வயது 82

**'அப்பலோ 8' இன் கட்டளையிடும் அதிகாரி.**



**விண்வெளி வாழ்க்கை**

'அப்பலோ 8' இல் சந்திரனின் சுற்றுப்பாதையை அடைந்து வரலாற்றில் இணைந்து கொண்டார். ஜெமினி 7 இற்குத் தலைமை தாங்கியவரும் இவரே.

**பொது வாழ்க்கை**

ஈஸ்டர்ஸ் எயார் லைனர்ஸ் நிறுவனத்தின் தலைவர். ஐரோப்பாவுக்கும் ஆசியாவிற்கும் தூதுவராக நியமனம் பெற்றிருந்தார்.

## ரொனல்ட் எவன்ஸ்

**'அப்பலோ 17' விண்வெளி ஓடத்தின் தலைமை விமானத்தின் செலுத்துனர்.**



**விண்வெளி வாழ்க்கை**

அப்பலோ விண்வெளி ஓடத்தின் தலைமை விமானத்தின் பொறுப்பாளராக இருந்து, சந்திரனின் சுற்றுப்பாதையில் தங்கி இருந்தார். மீண்டும் பூமிக்குத் திரும்புகையில் 66 நிமிடங்கள் விண்வெளியில் உலாவினார்.

**பொது வாழ்க்கை**

ஆரம்பத்தில் நிலக்கரித் தொழிலில் நிறைவேற்று அதிகாரியாக இருந்தார். பின்னர் ஸ்பெரி ஃப்லைட் சிஸ்டம்ஸ்ஸின் அதிகாரியாக இருந்தார்.

## கென் மெடிங்லி - வயது 74

**'அப்பலோ 13' தலைமை ஓடத்தின் கட்டளையிடும் அதிகாரி.**



**விண்வெளி வாழ்க்கை**

அம்மை நோயால் பாதிக்கப்பட்டதால் 'அப்பலோ 13' இன் செயற்பாடுகளில் பங்குகொள்ள முடியவில்லை. இரண்டு ஆண்டுகள் கழித்து சந்திரனுக்குச் சென்றார். இரு பயணங்களுக்கும் தலைமை தாங்கினார்.

**பொது வாழ்க்கை**

விண்வெளிப் பயணங்களில் முக்கிய பங்கெடுக்கும் நிறுவனங்களில் பிரதான நிறைவேற்று அதிகாரியாக செயற்பட்டார். அதன்பின்னர், 'ரொக்கெட்' அமைக்கும் நிறுவனமொன்றை நிறுவினார்.

## ஜேம்ஸ் அர்வின் (1930-1991)

**'அப்பலோ 15' இன் செலுத்துனர்.**



**விண்வெளி வாழ்க்கை**

அர்வின், ஸ்கொட் ஆகியோர் சந்திரனில் மேற்கொண்ட ஆய்வுகள் விஞ்ஞானத்துறைக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தன. அவர்களால் சந்திரனிலிருந்து கற்களைச் சேகரிக்கக்கூடியதாகவும் இருந்தது.

**பொது வாழ்க்கை**

'ஹய் ஃப்லைட் ஃபௌண்டேஷன்' எனும் பெயரில் கொலராடோ வில் மத அமைப்பொன்றினை ஏற்படுத்தினார். விண்வெளிப் பயணத்தின் போது இருதய நோயால் பாதிப்புற்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## டிக் கோடன் - வயது 80

**'அப்பலோ 12' இன் செலுத்துனர்.**

**விண்வெளி வாழ்க்கை**

தன்னுடன் பயணித்த இருவரும் சந்திரனில் காலடி வைத்தபோது, இவர் சந்திரனின் சுற்றுப்பாதையில் தங்கி இருந்தார். அத்துடன், 'ஜெமினி 11' இன் செயற்பாடுகளிலும் இணைந்து கொண்டார். 'அப்பலோ 11' இன் செயற்பாடுகளிலும் பங்களிப்புச் செய்தார். 'அப்பலோ 19' இன் செயற்பாட்டுக்கு தலைமை வகித்தார். இதன்போது சந்திரனில் காலடி வைக்க சந்தர்ப்பம் கிடைத்தபொழுதிலும், நிதி நெருக்கடி காரணமாக 'அப்பலோ 19' ஐ செயற்படுத்த முடியாமல் போனது.


**பொது வாழ்க்கை**

எண்ணெய், எரிபொருள், பொறியியல், கணினி மென்பொருள் போன்றவற்றுடன் தொடர்பான பல்வேறு நிறுவனங்களில் நிறைவேற்று அதிகாரியாக செயற்பட்டார். நிவ் ஓர்லன் சேன்டிஸ் தேசிய உதைபந்தாட்டக் குழுவின் பிரதித் தலைவராக செயற்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ற வீரர்கள் சிலர்





(மேல் படம்) விண்வெளிப் பயணத்தின் பின்னர் பூமி திரும்பிய விண்வெளி வீரர் எலன் பீன். (கீழ்படம்) எலன், தன்னுடன் சந்திரனில் காலடி வைத்த ஏனைய இருவரையும் வைத்து எடுத்த புகைப்படம். குறித்த புகைப்படத்தில் விண்வெளி வீரர் அணிந்திருக்கும் தலைக்கவசத்தின் கண்ணாடியில் காணப்படுபவர் எலன் பீன் ஆவார்.

## பீட் கொன்ராட் (1930-1999)

'அப்பலோ 12' இன் கட்டளையிடும் அதிகாரி.

**விண்வெளி வாழ்க்கை**

சந்திரனில் இரண்டாவது தடவையாக மனிதன் தரையிறங்கும் செயற்பாட்டிற்கு தலைமை வகித்தார். ஜெமினி 5, 11 ஆகிய செயற்பாடுகளில் பங்களிப்பு செய்தார். 'ஸ்கைலெப்' தரிப்பிடத்தின் முதல் செயற்குழுவிற்குத் தலைமை வகித்தார்.

**பொது வாழ்க்கை**

மெக்டொனல்ட் டக்ளஸ் நிறுவனத்தின் உப தலைவராக பதவி வகித்தார். அதன்போது பூமியின் சுற்றுப்பாதைக்குச் செல்லக்கூடிய 'ரொக்கெட் எஞ்ஜின்' ஒன்றை நிர்மாணித்தார்.

## யூஜின் சர்னன் - வயது 76

'அப்பலோ 17' இன் கட்டளையிடும் அதிகாரி.

**விண்வெளி வாழ்க்கை**

சந்திரனில் காலடிவைத்த இறுதி மனிதன். 'அப்பலோ 10' செயற்பாடுகளின்போது சந்திரனின் சுற்றுப்பாதையில் வலம் வந்தார். 'ஜெமினி 9' இன் செயற்பாடுகளின்போது பூமியின் சுற்றுப்பாதையில் நுழைந்து விண்வெளியில் உலா வந்தார்.

**பொது வாழ்க்கை**

விண்வெளி செயற்பாடுகளில் தொடர்புகொண்டார். ஏ.பீ.சி ஒளிபரப்பு நிலையத்துடன் தொடர்புகொண்டு செயற்பட்டார். 'சந்திரனுக்குச் சென்ற இறுதி மனிதன்' என்ற தலைப்பில் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரித்தார்.

## டேவிட் ஸ்கொட் - வயது 78



'அப்பலோ 15' செயற்பாடுகளின் பிரதான கட்டளையிடும் அதிகாரி.

**விண்வெளி வாழ்க்கை**

சந்திரனின் 'எபனீன்' மலையில் தரையிறங்கினார். சந்திரமண்டல செயற்பாடுகளின்போது செயல்ரீதியாக அங்குமிங்கும் சென்ற 'லூனா ரோவர்' ஊர்தியை முதன்முறையாக சந்திரனில் இயங்கச் செய்தவர் இவரே. 'அப்பலோ 9' செயற்பாடுகளின்போது பூமியின் சுற்றுப்பாதையில் நுழைந்தார். அழிவுக்குள்ளான 'ஜெமினி 8' செயற்பாடுகளில் ஆம்ஸ்ட்ரோங்குடன் உயிர் தப்பியவர்களில் இவரும் ஒருவர்.

**பொது வாழ்க்கை**

சொந்தமாக தொழில்நுட்ப நிறுவனமொன்றை நிறுவினார். தொலைக்காட்சி, சினிமா ஆகிய துறைகளில் ஆலோசகராக செயற்பட்டார். விண்வெளிப் போட்டி தொடர்பாக ரஷ்ய வீரரான அலெக்சி லொனேவுடன் இணைந்து நூலொன்றை எழுதினார்.

## எட்கர் மி(ச்)செல் - வயது 79



'அப்பலோ 14' இன் சந்திர ஓட செலுத்துனர்.

**விண்வெளி வாழ்க்கை**

'அப்பலோ 14' சந்திர ஓடத்தை சந்திரனில் உரிய இடத்தில் தரை இறக்கியதுடன், சந்திரனில் காலடி வைத்தார். 'அப்பலோ 10' இன் உதவியாளராகவும் செயற்பட்டார்.

**பொது வாழ்க்கை**

'மனிதன் உட்பட அனைத்து வஸ்துக்களும் நட்சத்திரங்களிலிருந்தே உருவாகின' என்ற கருத்து சந்திரனுக்கான பயணத்தின்போது இவருள் ஆழமாகப் பதிந்தது. அதன்படி, அதனோடு தொடர்புடைய விடயங்களை ஆராய்வதற்கென நிறுவனமொன்றையும் அமைத்தார்.

## ஸ்டுவர்ட் ரோசா (1933-1994)



'அப்பலோ 14' தலைமை ஓடத்தின் செலுத்துனர்.


**விண்வெளி வாழ்க்கை**

சந்திரனுக்கு ஒருமுறை மாத்திரமே சென்றார். அவருடன் சென்ற இருவரும் சந்திரனில் உலாவிக் கொண்டிருக்கும் வரை இவர் சந்திரனின் சுற்றுப்பாதையில் தரித்திருந்தார். சந்திர ஓடம் மீண்டும் தாய் ஓடத்துடன் இணையும்போது சிக்கல்கள் ஏற்பட்டன. எனினும், இவரின் திறமையால் விண்வெளி ஓடம் பாதுகாப்பாக பூமியை வந்தடைந்தது.

**பொது வாழ்க்கை**

வணிகம் மற்றும் நிலபுல விற்பனை போன்ற துறைகளுடன் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

## ஹெரிசன் ஸ்மிட் - வயது 75



'அப்பலோ 17' இன் சந்திர ஓட செலுத்துனர்.

**விண்வெளி வாழ்க்கை**

அமெரிக்கா சந்திரனுக்கான பயணத்தை முடிவுக்குக் கொண்டுவரத் தீர்மானித்தபோதுதான் விண்வெளி வீரராகச் செல்லும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. 'அப்பலோ 19' இல் செல்வதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருந்தபோதிலும், அவர் பெற்றிருந்த புவியியல் தொடர்பான பட்டத்தின் காரணமாக, 'அப்பலோ 17' இல் பயணம் செய்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. சந்திரனை நோக்கிய பயணத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு முன் புவியியல் விஞ்ஞானி ஒருவரை சந்திரனுக்கு அனுப்புவதற்கு நாஸா நிறுவனம் விரும்பியமையே அதற்கான காரணமாகும்.

**பொது வாழ்க்கை**

1977-1983 வரை நியூ மெக்ஸிகோ செனட் அங்கத்தவராக செயற்பட்டார். அதன்பின்னர் பேராசிரியர், எழுத்தாளர், வியாபார ஆலோசகர் ஆகிய பதவிகளை வகித்தார்.

## மைக்கல் கொலின்ஸ் - வயது 79

'அப்பலோ 11' தாய் ஓடத்தின் கட்டளையிடும் செலுத்துனர்.

**விண்வெளி வாழ்க்கை**

ஆம்ஸ்ட்ரோங், ஒல்ட்ரின் ஆகியோர் சந்திரனில் காலடி வைத்த சந்தர்ப்பத்தில் சந்திரனின் சுற்றுப்பாதையில் இவர் தரித்திருந்தார். 'ஜெமினி 10' செயற்பாட்டின்போது பூமியின் சுற்றுப்பாதையை வலம் வந்தார்.

**பொது வாழ்க்கை**

தேசிய விண்வெளி மற்றும் செய்மதி தொல்பொருளகத்தில் அதிகாரியாக செயலாற்றினார். 'லிஃப்ட் ஓஃப்' எனும் விண்வெளி நிறுவனத்தின் துணைத்தலைவராகவும் செயலாற்றினார்.

## எலன் ஷெபட் (1923-1998)



'அப்பலோ 14' இன் கட்டளையிடும் அதிகாரி.

**விண்வெளி வாழ்க்கை**

1961 ஆம் ஆண்டில் 'ஃப்ரீடம் 7' ரொக்கெட்டில் பூமியின் அரை சுற்றுப்பாதைக்கான விண்வெளிப் பயணத்தில் பங்கேற்றார். விண்வெளிக்குச் சென்ற முதலாவது அமெரிக்கர் இவராவார். விபத்தொன்றை சந்தித்த 'அப்பலோ 13' விண்ணோடத்துடன் தொடர்புடைய விண்வெளி வீரர். 'அப்பலோ 13' இன் விபத்தினால் மனமுடைந்திருந்த அனைவருக்குள்ளும் மீண்டும் தைரியத்தைக் கட்டியெழுப்ப எலன் ஷெபர்ட்டின் 'அப்பலோ 14' இற்கான பங்களிப்பு அளப்பரியது.

**பொது வாழ்க்கை**

கூர்மையான வணிக அறிவை இவர் கொண்டிருந்ததால், நிலபுல வர்த்தகம் மற்றும் உற்பத்திப் பகிர்வு போன்ற துறைகளில் செயற்பட்டார். விண்வெளி வீரர் டேக் ஸ்வேடனுடன் இணைந்து நூலொன்றையும் வெளியிட்டார்.

## ஜோன் யங் - வயது 79



'அப்பலோ 16' இன் கட்டளையிடும் அதிகாரி.

**விண்வெளி வாழ்க்கை**

'சந்திரனின் மலையொன்றில் தரையிறங்கினார். ஆறு தடவைகள் விண்வெளிக்குச் சென்றார். 'அப்பலோ 10' இன் செயற்பாட்டின்போது சந்திரனின் சுற்றுப்பாதையை வலம் வந்தார். ஜெமினி 3, 10 ஆகிய செயற்பாடுகளின்போது பூமியின் சுற்றுப்பாதையில் வலம் வந்தார்.

**பொது வாழ்க்கை**

2004 ஆம் ஆண்டு ஓய்வு பெறும் வரையில் நாஸா நிறுவனத்துடன் தொடர்புகொண்டிருந்ததோடு, பல்வேறு பதவிகளையும் வகித்தார்.





நாஸா நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இந்த இரு புகைப்படங்களில் மேலே காணப்படும் புகைப்படத்தில் 'அப்பலோ 11' சந்திரப் பயணத்தில் இணைந்த விண்வெளி வீரர்களான (இடமிருந்து) ஆம்ஸ்ட்ரோங், கொலின்ஸ், ஒல்ட்ரின் ஆகியோர் காணப்படுகின்றனர். கீழே காணப்படும் புகைப்படத்தில் இருப்பது அவர்கள் மூவரும் சந்திர பயணத்துக்கான 40 ஆவது நிறைவு விழாவில் கலந்துகொண்ட போதாகும்.



சந்திரனுக்குச் சென்ற விண்வெளி வீரர்களால் சந்திரனில் விட்டு வந்த பொருட்கள் பல உள. அவற்றில் கழிவுகளும் உண்டு. எனினும், இப்படத்தில் காண்பது விண்வெளி வீரர் ஒருவர் சந்திரனில் தவறவிட்ட தனது குடும்ப புகைப்படமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டுக்குருவி!

சின்னச் சின்ன சிட்டுக்குருவி
சிறகு விரித்துப் பறக்கும் குருவி
வண்ண வண்ண சாம்பல் நிறத்தில்
வனப்பாய் வானில் பறக்கும் குருவி!

கொட்டிக் கிடக்கும் தானியத்தை
கூடி வந்து கூடி நின்று
தொட்டுத் தொட்டு கொத்தித் தின்று
கூடிப் பறந்து கூடு செல்லும்!

ஒன்றாய் வராமல் ஒன்றோடொன்று
சேர்ந்து வரும் சிட்டுக்குருவி
நன்றாய் செப்பும் பாடம் கேட்போம்
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!



# அப்பாவின் அன்புள்ளம்



*(சென்ற இதழ் தொடர்ச்சி.....)*

ரமேஸின் அப்பா தர்மராசா ஓர் ஆசிரியர். அவர் மகன் ரமேஸை ஒரு நல்ல பிள்ளையாக வளர்க்க வேண்டும்; அவனை எதிர்காலத்தில் நல்லவனாக வாழச் செய்ய வேண்டும் என்று பல கற்பனைகளை வளர்த்திருந் தார். அவன் மீது மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டிருந்தார். ஆனாலும், அவன் செய்யும் தவறுகளை திருத்திக்கொள்ள அவனை சில வேளைகளில் அடிப்பது முண்டு. அவற்றை ரமேஸ் தப்பாகப் புரிந்துகொண்டு அப்பாவை பொல்லா தவர் என்று நினைத்தான்.

ஒருநாள் அடைமழை 'சோ'வெனப் பெய்தது. ரமேஸும் அவன் நண்பர் களும் அந்த மழையில் துள்ளிக் குதித்து விளையா டினர்; ஆடிப்பாடிக் கும்மாளமிட்டனர். அன்றிரவு படுக் கைக்கு சென்ற ரமேஸ் குளிரினால் நடுங்கினான். உடம்பு கொதித்தது.

அருகில் சென்று தொட்டுப்பார்த்த ரமேஸின் அப்பா துடித்துப் போய்விட்டார். பார்த்தாயா படிச்சுப் படிச்சு சொன்னேன். மழையில் நனைய வேண்டாமென்று. இப்ப பார் காய்ச்சலில் அவதிப்படுகிறாய்'' என்று கூறி வருந்தினார்.

மறுநாள் அப்பா அவனை வைத்திய சாலைக்குக் கூட்டிச்சென்றார். அவனைப் பரிசோதித்த மருத்துவர், ''உங்க மகனுக்கு காய்ச்சல் அதிகமா யிருக்கு. அதனால் மருத்துவமனையில் ஒரு கிழமை தங்கவைத்து குணமாக்க வேண்டும்'' என்றார்.

ஓடி ஆடித் திரிந்தவன் படுத்த படுக் கையாகக் கிடப்பதைப் பார்க்கையில் அப்பாவுக்கு நெஞ்சில் உதிரம் கொட்டியது. ரமேஸ் விழித்து எழும் போதெல்லாம் ''ரமேஸ், இப்ப எப்படிப்பா இருக்கிறது. இப்படி இளைச்சுப் போயிட்டியே'' என்று அவனின் தலையைக் கோதி விடுவார்.



ரமேஸுக்குத் தனது தவறுகள் புரிந்தன. அப்பாவை மனதுக்குள் ஏசியதை எண்ணி எண்ணி வருந் தினான். தனக்குக் கடவுளாகப் பார்த்து தண்டனை கொடுத்திருக்கிறார் என்று நினைத்துக் கொண்டான்.

''ரமேஸ்... நான் உன்னை அடிக்கிறது உன் நன்மைக்குத் தான்பா. அங்குமிங்கும் ஓடியா டித் திரிவாயே... இப்ப படுத்த படுக்கையாக கிடக்கிறியே...!'' என்று புலம்பினார்.

ரமேஸ் தந்தையின் அன்பு மொழிகளைக் கேட்டு கண்ணீர் சிந்தினான். அவருடைய பாசத்தின் ஆழத்தை உணரத் தொடங்கினான். ''அப்பா.... என்னை மன்னிருங்கப்பா... நான் தெரியாமல் தப்புகள் பண்ணிட்டேன். இனிமேல் உங்கள் சொற்படி கேட்பேன்'' என்று கூறி அப்பாவை அன்புடன் அணைத்துக் கொண்டான். மகனின் மாற்றம் கண்டு அப்பா மனம் மகிழ்ந்தார்.

பு.கிஷாந்தி,
தரம்-10^A,
கிரேக் த.ம.வித்.,
பண்டாரவளை.

# அழிவற்ற செல்வம் கல்வி



'கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்பது திருவள்ளுவரின் கூற்றாகும். நாம் கற்கும் கல்வியைப் பிழையின்றிக் கற்றபின் அதன்படி செயற்படல் வேண்டும். இவ்வாறு கற்கும் கல்வி யானது அழியாத செல்வமானது மட்டுமன்றி எமது அன்றாட வாழ் வில் நாம் அமைதியான முறையில் செயற்படவும் உதவுகின்றது.

கடந்த காலங்களில் வாழ்ந்த மனிதர்களில் பலர் இன்று உலகளா விய ரீதியில் உயர்ந்தவர்களாக கணிக்கப்படுவதற்குக் காரணம் அவர்கள் கற்ற கல்வி அறிவேயாகும். அந்தவகையில், எண்ணும் எழுத்தும் எம் இரு கண்களே.

'கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு'. இது கல்வி யின் சிறப்பை மேலும் சிறப்பித்துக் காட்டுவதாகும். இன்று சாதாரண பிள்ளைகூட தாயின் கருவிலேயே அறிவைப் பெற்றுக்கொள்வதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். எனவே, கல்வியின் பயன் அளவில் லாத, அழிவில்லாத செல்வம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எஸ்.சங்கீர்த்தனா,
தரம்-5,
க/கிறேட்வெளி த.வித்.,
தெல்தோட்டை.

## சிந்தனைக்கு சில வரிகள்...

✱ போர்க்களத்தில் பெறக்கூடிய சில வெற்றிகளை இழக்கக்கூட நான் சம்மதிப்பேன். ஆனால், காலம் வீணாக்கப்படுவதை, இழக்கப்படுவதை மட்டும் ஒருபோதும் விரும்பமாட்டேன்.
-நெப்போலியன்

✱ ஒய்வை விவேகத்துடன் பயன்படுத்துவதே கல்வியின் குறிக்கோள். -அரிஸ்டோட்டில்

✱ கடினமான வேலையைச் செய்வதில் மகிழ்ச்சியைக் காணும் மனநிலை கொண்ட மனிதர்களே எப்பொழுதும் வெற்றி வீரர்கள் ஆவார்கள். -மில்ரன்


✱ ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமை யல்ல. விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.
ஆங்கிலேயக் கவிதை
மொழிபெயர்ப்பு -கவிஞர் வாலி

✱ எங்கு ஒரு நூலகம் திறக்கப் படுகின்றதோ, அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது.
-சுவாமி விவேகானந்தர்

✱ அதிர்ஷ்டம் உனக்கு சட்டி யைத் தேடித்தரலாம். ஆனால், சட்டியில் உலையைப் போடுவது உன் உழைப்பைப் பொறுத்ததே.
-ஜோன் கே

தொகுப்பு: ச.பா.சுல்பா,
மட்/அல்-அமீன் வித்.,
காத்தான்குடி.

## காந்திஜியின் வாழ்வில்...



அன்னை கஸ்தூரிபா காலமானதும் அவர் உடல் தகனம் செய்யப்பட்டது. அப்போது காந்தியடிகள் அங்கேயே அமர்ந்திருந் தார்கள். அங்கு இருந்த ஒருவர் காந்தியடிகளிடம் 'இறுதி வரை இங்கு இருக்க வேண்டுமா?'' என்று கேட்டார். அதற்கு காந்தியடிகள், ''அறுபத்தி யிரண்டு ஆண்டுகள் கஸ்தூரிபாவுடன் நான் வாழ்ந்தவனாயிற்றே! இப்போது அவள் உடல் எரிந்து முடிவ தற்கு முன் நான் போய்விட்டால், என் கஸ்தூரிபா என்னை மன்னிக்கவே மாட்டாள்'' என சோகத்துடன் பதில் அளித்தார்.

எம்.எம்.
அஸ்பாக்,
அந்-நூர் தே.பாட.,
வாழைச்சேனை.

# நிபுணரின் முடிவு



*ஓர் ஊரில் ஒரு சிறந்த கணித நிபுணர் இருந்தார். அவர் நூல்களைப் படிப்பதிலேயே தனது காலத்தைக் கழித்து வந்தார். இதனால், உலகத்தின் இயல்பு நிலையை சிறிதும் அறியாத ஒருவரா கவே அவர் காணப்பட்டார்.*

*ஒருநாள் அவர் ஓர் ஆற்றைக் கடக்க வேண்டி ஏற்பட்டது. ஆற்றின் சில இடங் களில் ஆழம் ஆறடியாகவும் சில இடங்களில் நான்கு அடியா கவும் இன்னும் சில இடங்களில் மூன்று அடியாகவும் இருந்தன. இந்த மூன்று ஆழங்களின் சராசரியைக் கணித்த அறிஞர் அந்த ஆறு சராசரி ஐந்து அடியைவிடவும் குறைவாக இருப்பதைக் கண்டு ஆற்றைக் கடக்க முடிவு செய்தார். ஏனெனில், அவரின் உயரம் ஐந்தடிக்கும் அதிகமாக இருப்பதால் ஆற்றில் இறங்கி கவனமாக கடக்க முடியும் என்றும் அவர் எண்ணினார். எனினும், ஆறடி ஆழம் உள்ள இடத்தை அடைந்ததும் அவர் நீரில் மூழ்கித் தத்தளித்து இறுதியில் மாண்டு போனார். அவருக்கு நீந்தத் தெரியாமையால் சோகமான அந்த முடிவை அடைய நேர்ந்தது. இவ்விதமாக உலக அனுபவமின்மை அந்த நிபுணரின் உயிரையே குடித்துவிட்டது.*

எம்.பீ.பாத்திமா சப்ரீனா,
இ.சீ.சீ.த.ம.வித்.,
பலாங்கொடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3637
வ.தனுகுமார், தரம் - $2^{C}$, இந்து தே.கல்., மாத்தளை.


அங்.இல: 3638
நுஸைப் முஹம்மட், தரம் - 2, அத்தாரிக் மு.ம.வித்., குருநாகல்.


அங்.இல: 3639
மேரி துவிஷனா, தரம் - $8^{B}$, இளவாலை கன்னியர் மடம், இளவாலை.


அங்.இல: 3640
ஞா.அருஸ்ரின், தரம் - $9^{C}$, புனித சவேரியார் கல்., மன்னார்.


அங்.இல: 3641
முஜாஹித் முர்ஸித், தரம் - 5, அபாபீல் ச.பாட., வெள்ளம்பிடிய.


அங்.இல: 3642
உ.கஜீவன், தரம் - $7^{B}$, யாழ்ப்பாணக் கல்., வட்டுக்கோட்டை.


அங்.இல: 3643
ஹிமாஸ் நஸீம், தரம் - $1^{B}$, மின்ஹாத் க.பாட., திக்குவல்லை.


அங்.இல: 3644
எச்.முனாப், தரம் - $11^{A}$, அல்-அமீன் ம.வித்., வரிப்பத்தான்சேனை.


அங்.இல: 3645
ஏ.யாஸீர், தரம் - 7, ஸாஹிரா கல்., கொழும்பு-10.


அங்.இல: 3646
எம்.குலாம், தரம் - 10, சலாமியா அ.கல்., ஹெம்மாதகம.


அங்.இல: 3647
ச.சுராங்கனி, தரம் - 7, புனித மரியாள் ம.வி., மதுகம.


அங்.இல: 3648
பா.யுதர்சினியா, உயர் தரம், கனகரத்தினம் ம.ம.வித்., யாழ்ப்பாணம்.

# கொப்பர்னிகஸ் பூதவுடலுக்கு கௌரவம்



உலகப் புகழ்பெற்ற வானவியலாளர் நிக்கலஸ் கொப்பர்னிகஸ் இறந்து 467 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. ஐரோப்பாவின் போலந்து நாட்டு வானவியலாளரான கொப்பர்னிகஸ் 1473 ஆம் ஆண்டு பிறந்தார். அவர் ஒரு கிறிஸ்தவ மதகுரு. மிகச் சிறந்த கணிதவியலாளருமாவார். நவீன வானவியலின் தந்தை என அவரை இன்று அழைக்கின்றோம். இப்பிரபஞ்சத்தின் மையம் புவியல்ல; சூரியனே என்று முதன்முதலாகக் கூறியவர் நிக்கலஸ் கொப்பர்னிகஸ்தான். எனினும், அன்று அவருக்கு அவ்வளவும் தூரம் வரவேற்பு எதுவும் இருக்கவில்லை. ரோமன் கத்தோலிக்க தேவாலயம் கூட அவருக்கு எதிராக இருந்தது. அதுமட்டுமல்ல; அவருக்குத் தண்டனையும் வழங்கியது. கொப்பர்னிகஸ்ஸின் பூதவுடல் கூட கத்தோலிக்க தேவாலயத்தின் முறையான கௌரவம் வழங்காமலேயே அடக்கம் செய்யப்பட்டது.

கொப்பர்னிகஸ்ஸின் பூதவுடல் போலந்தில் உள்ள அவரின் பிறந்த ஊரான டோரன் எனும் நகரில் அடக்கம் செய்யப்பட்டது. டி.என்.ஏ (D.N.A) பரிசோதனை மூலம் சரீரம் கொப்பர்னிகஸ் அவர்களுடையதே என பல வருடங்களுக்கு முன்பே நிரூபிக்கப்பட்டது. கொப்பர்னிகஸ் இறந்து சரியாக 467 வருடங்கள் பூர்த்தியான தினத்தன்று அவரின் பூதவுடலை போலந்தின் தேவாலயமொன்றில் அடக்கம் செய்ய அனுமதி கிடைத்தது. அதேபோல், அன்று கொப்பர்னிகஸ் அவர்களின் கருத்தைக் கண்டித்து நிராகரித்த கத்தோலிக்க திருச்சபை அதுகுறித்து தமது தவறுக்காக மன்னிப்பைத் தெரிவிக்கவும் அச்சந்தர்ப்பத்தில் தவறவில்லை. 1999 ஆம் ஆண்டு போலந்து நாட்டைச் சேர்ந்த இரண்டாம் ஜோன் போல் பாப்பரசர் டோரன் நகருக்கு வருகை தந்து வானவியல் துறைக்காக அவர் ஆற்றிய பணிகளை மதிப்பீடு செய்தார். -(அ)


## துஷாரா கலைவட்டம் - 2010

## எக்ரோன் அகில இலங்கை சித்திரப் போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)**

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, பிலிந்து பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்களும் நிபந்தனைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**போட்டி விதிமுறைகள்**

- அளவு - அங்குலம் 14×18 அளவு
- வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் ஆகியனவற்றில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
- தலைப்பு - எந்வொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
- ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
- பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**போட்டிப் பிரிவுகள்**

- முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
- பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
- பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் கீழ்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின் அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை) | | |
|---|---|---|
| முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை) | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர் | தெரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர் | பிரிவுக்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron ஒயில் பெயின்ட் 15 போட்டியாளர்கள் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதம் | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron அதிவிசேட வெற்றியாளர்கள் 15 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron விசேட வெற்றியாளர்கள் 150 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron சான்றிதழ் பெறுவோர் 400 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |
| திறமைச்சான்றிதழ் 2000 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |

Acron லேபிள் ஒட்டப்பட்ட 100 சித்திரங்களை அனுப்பச் செய்கின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.
(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)
சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.
வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான மண்டபங்கள் இரண்டிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன் குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் வைத்து வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி 2010 ஜூலை 31.**

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு** - 011 4962520, 0714483704.

## துஷாரா கலைவட்டம்

THUSHARA KALA KAVAYA

Color CRAFT

அகில இலங்கை சித்திரப்போட்டி-2010

Acron® All Island Art Competition

விண்ணப்பப்படிவம் — Application Form

போட்டியாளரின் பெயர்:
Applicant's Name :

முன்பள்ளி/பாடசாலை/
பல்கலைக்கழகம்/பகிரங்க :
Pre School, Schools, University & Open Category :

பிறந்த திகதி:
Date of Birth :

ஆண்/பெண்
Sex : ஆண் Female ☐ பெண் Male ☐

வீட்டு முகவரி:
Personal Address :

தொலைபேசி இல:
Telephone :

வகுப்பு:
Grade :

சித்திரத்தின் தலைப்பு:
Topic :


பாவித்துள்ள வர்ணம்:
Medium of Expression
Oil, Water color, Poster CLR, Pastels :

| ................................. | ................................. | ................................. |
|---|---|---|
| போட்டியாளரின் கையொப்பம் | திகதி | பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் |
| Applicant's Signature | Date | Parents/Guardians Signature |

பிரதான அனுசரணை: Acron COLSTAR
ஊடக அனுசரணை:

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தெல்தோட்டை மலைமகள் இந்து மத்திய கல்லூரியில் தேசிய நீர் வழங்கல் வடிகால மைப்பு சபையினால் நடாத்தப் பட்ட நீர் பராமரிப்பு, பாதுகாப் புத் தொடர்பான கருத்தரங்கு மற்றும் கண்காட்சியின்போது கல்லூரியின் பிரதி அதிபர் எஸ்.ரவிச்சந்திரன், உப அதிபர் எம்.நேரு ஆகியோருடன் மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(தகவல்: நா.அருண்காந்த்- தெல்தோட்டை)




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



மு.ஜீவநேசன், தரம் - 10,
பாமஸ்டன் த.வித்., தலவாக்கலை.



எம்.பஸாஹிர், தரம் - 4,
அகார மு.வித்., அகார.



லி.அனுஷன், தரம் - 8B,
தாண்டிக்குளம் பிரமண்டு வித்.,
வவுனியா.



எம்.ரிஹான்,
தரம் - 8D, அல்-அஸ்கர் ம.வித்.,
மாவனல்லை.




எம்.ராஜ்குமார், தரம் - 9B,
அல்-அக்ஸா மு.ம.வித்.,
எஹலியகொட.



எம்.அஸ்கர்,
தரம் - 6, வெலம்பொடை மு.ம.வித்.,
வெலம்பொடை.



ர.பிரியாழினி, தரம் - 5,
மெராயா த.ம.வித்., லிந்துல.



முன்தஷிர் அஹ்மட்,
தரம் - 2, பரிசுத்த திருத்துவ மத்.கல்.,
நுவரெலியா.



எஃப்.அஷ்ரா, தரம் - 11,
அஸ்ஹர் கல்., அக்குறனை.



ஆர்.சஞ்ஜீவனி, தரம் - 7A,
எக்பர்த் த.வித்., புளுதொட்ட.

கொழும்பு-12, ஹமீத் அல்-ஹுசைனி கல்லூரியில் தரம்-8B யில் கல்வி பயிலும் மாணவன் எம்.எம். முபாஷிர், தமிழ்மொழியில் அதிக புள்ளிகள் பெற்றமைக்காக, பாடசாலை தினத் தன்று அவருக்கு சான்றிதழ் வழங்கப் படுவதையே படத் தில் காண்கிறீர்கள்.





கண்டி, வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த சுகுமார்-எழில்பிரியா தம்பதியரின் செல்வப் புதல்வி சு.பிரணவி தான்யா, 21.06.2010 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் இறைவனின் அருள்பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: எம்.லக்ஷிகா)




வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

ஏற்கனவே நாம் செய்த பயிற்சிகளினூடாக பல்வேறு ரேகைகளை வரையப் பழகியதற்கமைய, உங்கள் கைகள் அவற்றை சுலபமாக வரையப் பழக்கப்பட்டிருக்கும். எனவே, முயற்சியைக் கைவிடாது தொடர்ந்து பல உருவங்களை வரைந்து பழகுங்கள்.


அத்துடன், ஓவியங்கள் வரைவதற்கு சிறந்த ரக பென்சில்களைத் தேர்ந்தேடுப்பது அவசியமாகும். $HB_2$, $HB_3$, $HB_4$ என்ற குறியீடுகளைக்கொண்ட வீனஸ் ரக பென்சில்கள் இதற்கு உகந்தவை. தவிர, சீனாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற No HB 3544 அல்லது வேறு நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற சிறந்த ரக பென்சில்களும் ஓவியம் வரைவதற்கு ஏற்றவை.

மேலும், வரைதலின்போது அழுக்கு ஒட்டாத அழிரப்பர்களைப் பாவிப்பதும் நல்ல படைப்புக்கு வழியமைக்கும். சரி, பயிற்சியொன்றைச் செய்வோம்:-

## நாய் ஒன்றை வரைவது எப்படி?

1. படத்தில் உள்ளவாறு முதலில் நாயின் தலைப்பகுதியை வரையவும்.
2. நாயின் தலை, கண், காது, மூக்கு என்பனவற்றை வரையவும்.
3. தலைக்குப் பொருத்தமான உடலை வரையுங்கள்.
4. கால்கள், வால் என்பனவற்றை வரையவும்.
5. இறுதியில் தேவையற்ற ரேகைகளை நீக்கி படத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# கிழவரை இளைஞனாக்க இளவரசியின் ஆலோசனை



நீண்ட நேரம் தூங்கிய இவான் குதிரையின் குளம்பொலி கேட்டு துடுக்குற்று எழுந்தான். அப்போது தங்கப் பிடரிமயிர் கொண்ட பெண் குதிரை கோச் வண்டி ஒன்றை இழுத்துக் கொண்டுவந்ததைக் கண்டான். அதேவேளை, ஆறு கடற் குதிரைகள் தங்கப் பிடரிமயிர் கொண்ட பெண் குதிரையின் இரு பக்கங்களில் ஒட்டிக்கொண்டு தொங்கின.

வயதில் இளைய அறிவில் மூத்த இவான் தனது குதிரையை நோக்கி விரைய, அது கூறியது; '' நீ என்னை மாட்டுத் தோல்களால் மூடிக் கட்டித் தார் பூசாது விட்டிருந்தால் என்னைத் திரும்பவும் நீ பார்த்திருக்க முடியாது. கடற்குதிரைகளின் மந்தை முழுவதும் என்மீது பாய்ந்தன. பன்னிரண்டு மாட்டுத்தோல்களில் ஒன்பதைத் துண்டம் துண்டமாக அவை கிழித்துவிட்டன. மற்ற இரண்டைக் கடித்துவிட்டன. ஆறு குதிரை களின் பற்கள் தார் பூசப்பட்ட கயிற்றோடு இறுக ஒட்டிக் கொண்டன. அவற்றால் விடுபட முடியவில்லை. ஆனால், பரவாயில்லை. அவை உனக்குப் பயன்படும்''

வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் கடற் குதிரைகளின் கால்களை அவை ஓடிப்போக முடியாதவாறு கட்டினான். தனது சாட்டையை எடுத்து அவற்றிற்குப் பாடம் கற்பிக்க ஆரம்பித்தான். அவற்றை இவான் அடித்தபோது கூறினான்; ''உங்கள் எஜமானனாக என்னை ஏற்றுக்கொள்வீர்களா? எனக்குக் கீழ்ப்படிவீர்களா? இல்லையென்றால் உயிரோடு உங்கள் தோலை உரித்து, பிணத்தை ஓநாய்களுக்கு வீசுவேன்''

கடற் குதிரைகள் முழங்காலிட்டு விழுந்து இவானிடம் கெஞ்சத் தொடங்கின; ''இதற்கு மேலும் எங்களை அடிக்க வேண்டாம்! உன்னுடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் கீழ்ப் படிந்து நம்பிக்கையோடு பணியாற்றுவோம். எப்பொழுதேனும் உனக்குச் சிரமம் ஏற்பட்டால், உனக்கு உதவிக்கு வருவோம்'' என்றன.

இதனால், அவற்றை அடிப்பதை இவான் நிறுத்தி, குதிரைகளை கோச் வண்டியில் பூட்டி வீட்டுக்கு ஓட்டிச் சென்றான். அரசருடைய மாளிகையின் முன்கதவு வரை அவை பாய்ந்து சென்றன. பின்னர் இவான் தனது பெண் குதிரையையும் கடற் குதிரைகளையும் லாயத்தில் பூட்டிவிட்டு அரசரிடம் சென்றான்.

''அரசரே, வந்து அந்த கோச் வண்டியை ஏற்றுக்கொள்ளுங்கள். அனைத்து சீதனங்களுடனும் அது உங்கள் முற்றத்தில் காத்துக்கொண்டிருக்கிறது''

அரசர் வெளியே விரைந்து நேராக கோச் வண்டிக்குச் சென்றார். அதிலிருந்த பெட்டியை எடுத்து பேரழகி இளவரசி அல்யோனாவிடம் கொடுத்தார். ஆனால், இவானுக்கு அரசர் ஒரு நன்றிகூடக் கூறவில்லை.

''நல்லது,பேரழகி இளவரசி அல்யோனா, உனது விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றிவிட்டேன். இதோ! உன்னுடைய பெட்டியும் மோதிரமும். உனது கோச் வண்டி வெளியே காத்துக்கொண்டிருக்கிறது. சரி இப்போது மணவிழாவை எப்போது வைத்துக்கொள்ளலாம் என்றும் விருந்தினர்களை எப்போது நான் அழைக்க வேண்டும் என்பதையும் என்னிடம் கூறு''

பேரழகி இளவரசி அல்யோனா பதிலளித்தாள்; ''உங்களை மணப்பது பற்றிக் கவலைப்படவில்லை. சீக்கிரமே மணவிழாவை நம்மால் வைத்துக்கொள்ள முடியும். ஆனால், மிகவும் தலை நரைத்த வயதானவருடன் மாதாகோயிலுக்குச் செல்வதை நான் விரும்பவில்லை. நிச்சயமாக மக்கள் நம்மைப் பார்த்துச் சிரிப்பார்கள், 'கிழவன் இளம் பெண்ணை மணப்பதைப் பாருங்கள்' என்று கூறுவார்கள். வம்பு பேசும் வாய்களை நிறுத்துவது கஷ்டம் என்று உங்களுக்குத் தெரியும். நமது திருமணத்திற்கு முன்னர் நீங்கள் இளைஞராக மாறினால் மட்டுமே திருமணம் நல்லபடியாக நடக்கும்''

''அதைவிட மகிழ்ச்சியானது எதுவுமில்லை. ஆனால், அதை எப்படிச் செய்யவேண்டும் என்பதை நீதான் எனக்குக் கற்பிக்க வேண்டும். இதைப் பற்றி எங்கள் நாட்டில் எவருக்கும் ஒன்றும் தெரியாது''

பேரழகி இளவரசி அல்யோனா கூறினாள்; ''மூன்று பெரிய பித்தளைக் கொப்பரைகள் எடுத்து ஒன்றை முழுக்கப் பாலாலும் மற்றைய இரண்டை நீரூற்று நீராலும் நிரப்பவேண்டும். பால் உள்ள கொப்பரையும் நீர் உள்ள ஒரு கொப்பரையும் நன்றாக சூடாக்கப்படல் வேண்டும். அவை கொதிக்க ஆரம்பித்ததும் முதலில் பாலிலும் பின்னர் வெந்நீரிலும் இறுதியாகத் தண்ணீருக்குள்ளும் குதிக்க வேண்டும். மூன்று கொப்பரைகளிலும் மூழ்கி எழுந்த பின்னர் இருபது வயது இளைஞனைப் போல அழகுடன் திகழ்வீர்கள்''

''ஆனால், நான் வெந்து போகமாட்டேனா?'' என்று அரசர் கேட்டார்.

''என்னுடைய நாட்டில் கிழவர் எவருமே இல்லை. எல்லோரும் இதைத்தான் செய்கிறார்கள். எவரும் வெந்து இறந்ததில்லை''

பேரழகி இளவரசி அல்யோனா தன்னிடம் கூறியபடியே அரசர் எல்லாவற்றையும் உடன் தயார் செய்யச் சொன்னார். பாலும் நீரும் கொதித்தபோது, அவர் நடுநடுங்கிப் போனார். அதற்குள் குதிப்பதற்குத் துணிவு வரவில்லை. கொப்பரைகளைச் சுற்றிச் சுற்றி நடந்தார். பின்னர் தனது நெற்றியில் அடித்துக்கொண்டு, யோசித்தார். 'வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் முதலில் இதில் குளிக்கட்டும்! அனைத்தும் நன்றாக நடந்தால் நானும் மூழ்குவேன். மாறாக அவன் வெந்து போனால்,அவனுக்காக யாரும் அழப் போவதில்லை. அவனுடைய குதிரைகள் எல்லாம் என்னுடையனவாகும். நான் வாக்குக் கொடுத்தது போன்று என் நாட்டை அவனுடன் பங்கு போட்டுக் கொள்ளவும் வேண்டியதில்லை' என மிகவும் கபடமாக அரசர் சிந்திக்கலானார்.

(அடுத்த இதழில் முடியும்)

# விளையாட்டின் விபரீதம்



கடும் வெயிலின் தாக்கம் அதிகரித்துக் கொண்டிருந்தது. மக்களெல்லாம் மர நிழல்களையும் கடற்கரைகளையும் நாடிச் சென்று கொண்டிருந்தனர். ஏன் இந்த வெப்பம் வருடா வருடம் அதிகரிக்கிறது? பூமி வெப்பமாவதற்குக் காரணமே மரங்களை வெட்டிச் சாய்ப்பதுதான். அத்துடன், நாம் விடுகிறோமா? விவசாய நிலங்களை எல்லாம் கட்டடங்களாக்குவது, பிளாஸ்டிக் பொருட்களை தீயில் எரிப்பது, சுகாதாரக் கேடுகளை ஏற்படுத்துவது என்றெல்லாம் பூமிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களை நாம் தொடரத்தானே செய்கிறோம்?

உச்சிவேளை, வெயில் தாங்க முடியவில்லை அந்த முதியவர் வெப்பத்தின் தாக்கத்தால் தள்ளாடித் தள்ளாடி மர நிழலைத் தேடி கம்பை ஊன்றியவாறு நடந்து கொண்டிருந்தார்.

அப்போது நாலைந்து சிறுவர்கள் அங்கே விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் முதியவர், ''அருகில் மரம் எதுவும் இருக்கிறதா?'' என்று கேட்டார்.

அந்தச் சேட்டைக்காரச் சிறுவர்களோ, தாத்தாவைக் கிண்டல் செய்ய ஆரம்பித்தார்கள். ''தாத்தோவ்... நேரே போங்க... மரங்கள் அங்கே தானிருக்கு'' என்று சொல்லிவிட்டுத் தங்களுக்குள் சிரித்துக் கொண்டனர். தள்ளாடியபடியே அந்த முதியவரும் அவர்கள் கூறிய பாதையில் நடந்தார்.

அப்போதுதான் முதியவர் நடந்து செல்லும் பாதையைக் கவனித்தான் சேகர். அது மிக ஆபத்தான பாதை. இன்னும் சிறிது நேரம் நடந்தால் பாதாளப் படுகுழியில்தான் விழவேண்டும். இதனால், சேகர் முதியவரைப் பார்த்து மிகவும் அதிர்ச்சி அடைந்தான். பதற்றத்துடன் ஓடிப்போய், முதியவரின் கையைப் பிடித்து மேலும் அவரை நடக்க விடாமல் தடுத்தான். ''தாத்தா... எங்கே போகிறீர்கள்?''

''தம்பி, வெயிலின் கொடுமையைத் தாங்கமுடியவில்லை. உடம்பெல்லாம் எரிகிறது. மர நிழலில் கொஞ்சம் உட்கார்ந்துட்டுப் போகணும்'' என்றார்.

''இந்தப் பாதையில் உங்களைப் போகச் சொன்னது யார்?''

''உன்னை மாதிரி சில பொடிப்பசங்கதான் இந்தப் பாதை வழியாகப் போகச் சொன்னாங்க தம்பி''

''நான் மட்டும் வரலேன்னா நீங்க படுபாதாளக் குழியில் விழுந்திருப்பீங்க தாத்தா'' என்றான் சேகர்.

முதியவருக்கு அதிர்ச்சியில் உடம்பெல்லாம் நடுங்கியது. சேகரைக் கட்டிப்பிடித்து உச்சி முகர்ந்து நன்றி கூறினார்.

கருணையுடன் முதியவரை அழைத்துக்கொண்டு போய் ஒரு மர நிழலில் உட்கார வைத்தான் சேகர்.

அப்போது அருகில் சிறுவர்களின் சிரிப்பொலிகள் கேட்டன. சேகர் அங்கே சென்று அவர்களைக் கோபத்துடன் பார்த்தான். அவனைப் பார்த்ததும் அச்சத்துடன் அவர்கள் மௌனமானார்கள்.

அவர்களைப் பார்த்து சீற்றத்துடன், ''டேய் பசங்களா... நமக்கும் முதுமைக்காலம் வரும். நாளைக்கு நாமும் இந்த முதியவரைப் போல ஆகிவிடுவோம். அப்போது நமக்கும் இதே கதிதான் ஏற்படும். நமக்கு யாராவது இப்படித்தான் படுபாதாளக் குழியைக் காட்டுவார்கள். உங்கள் விளையாட்டால் எவ்வளவு பெரிய ஆபத்தில் அந்த முதியவர் சிக்கியிருப்பார். நீங்கள் எல்லாம்....'' என்று அவர்களைப் பார்த்துக் கோபத்துடன் கூறிவிட்டு வேகமாக நடந்தான் சேகர்.

தம் தவறை உணர்ந்த சேட்டைக்காரச் சிறுவர்கள் முதியவரிடம் சென்று மன்னிப்புக் கேட்டனர். கூடவே சேகரின் மனிதநேயத்தைக் கண்டு, அச்சிறுவர்களும் தெளிவாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන் ஆயுபோவன் வணக்கம்

இன்றைய பாடத்தில் மாலாவுக்கும் தங்கைக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

மාලා: නංගි එන ඉරිදාට පොඩි පාටියක් තියෙනවා.
நங்கி என இரிதாட பொடி பாடியக் தியெனவா.
மாலா: தங்கச்சி வருகிற ஞாயிற்றுக்கிழமை விருந்து ஒன்று இருக்கிறது.

නංගි: හරි ෂෝක්. ඒ කොහේද?
ஹரி ஷோக். ஏ கொஹேத?
தங்கை: மிகவும் நல்லது. அது எங்கே?

මාලා: ඉරිදාට සීතාගේ උපන්දිනය. දවල් කෑමට එන්න කිව්වා.
இரிதாட சீதாகே உபன்தினய. தவல் கேமட என்ன கிவ்வா.
மாலா: ஞாயிற்றுக்கிழமை சீதாவின் பிறந்தநாள்.
பகல் உணவுக்கு வரச் சொன்னாள்.

නංගි: අක්කේ මාවත් එක්කන් යනව නේද?
அக்கே மாவத் எக்கன் யனவ நேத?
தங்கை: அக்கா என்னையும் கூட்டிக்கொண்டு போவீர்கள்தானே?

මාලා: ඔව්... ඔව් ඔයාවත් එක්කන් එන්න කිව්වා.
ஒவ்... ஒவ் ஒயாவத் எக்கன் என்ன கிவ்வா.
மாலா: ஆம்... ஆம் உன்னையும் அழைத்து வரச்சொன்னாள்.

නංගි: අක්කේ අපි මොනවද සීතා අක්කාට ගෙනියන්නේ?
அக்கே அபி மொனவத சீதா அக்காட கெனியன்னே?
தங்கை: அக்கா நாங்கள் சீதா அக்காவுக்கு என்ன கொண்டுபோகலாம்?

මාලා: අපි හොඳ හෑන්ඩ්බෑග් එකකුයි ගවුම් රෙද්දකුයි අරගෙන යමු.
அபி ஹொந்த ஹேன்ட்பேக் எககுய் கவும் ரெத்தகுய் அரகென யமு.
மாலா: நாங்கள் நல்ல கைப்பை ஒன்றும் சட்டைத் துணி ஒன்றும் கொண்டுபோவோம்.

නංගි: ඒවා කවදටද ගන්න යන්නේ?
ஏவா கவதடத கன்ன யன்னே?
தங்கை: அவற்றை எப்போது வாங்கப் போகிறோம்?

මාලා: අපි හෙට හවස යමු.
அபி ஹெட ஹவச யமு.
மாலா: நாங்கள் நாளை பின்னேரம் போவோம்.



නංගි: අක්කේ මටත් මොනවා හරි අරගෙන දෙන්න.
அக்கே மடத் மொனவ ஹரி அரகென தென்ன.
தங்கை: அக்கா எனக்கும் ஏதாவது வாங்கித் தாருங்கள்.

මාලා: හා... හා අරගෙන දෙන්නම්.
ஹா... ஹா அரகென தென்னம்.
மாலா: சரி... சரி வாங்கித் தருகின்றேன்.

නංගි: මගේ හොඳ අක්කා.
மகே ஹொந்த அக்கா.
தங்கை: என்னுடைய நல்ல அக்கா.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

**உதாரணம்:** ஞாயிற்றுக்கிழமை சீதாவின் பிறந்தநாள்.
ඉරිදාට සීතාගේ උපන්දිනය.



i. பகல் உணவிற்கு வரச்சொன்னாள்.
..........................................................................

ii. நல்ல கைப்பை ஒன்றும் சட்டைத் துணி ஒன்றும் கொண்டுபோவோம்.
..........................................................................

iii. நாங்கள் நாளை பின்னேரம் போவோம்.
..........................................................................




'going to' (வினைச்சொல்) சகிதம் மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப்படுகின்ற எதிர்கால வாக்கியங்களின் (Future Tense) 'உடன்பாடு நிலை' (Affirmative) மற்றும் வினா நிலை (Interrogative) வாக்கியங்களை மேலும் இங்கே பயில்வோம்.

(அ) Your brother is going to buy. (Affirmative)
உனது சகோதரன் வாங்கப் போகின்றான். (உடன்பாடு)

(ஆ) Is your brother going to buy? (Interrogative)
உனது சகோதரன் வாங்கப் போகின்றானா? (வினா)

(அ) Your brother is going to buy a car.
உனது சகோதரன் கார் ஒன்று வாங்கப் போகின்றான்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஆ) Is your brother going to buy a car?
உனது சகோதரன் கார் ஒன்று வாங்கப் போகின்றானா?
(வினா வாக்கியம் - Interrogative)

---

(இ) Your sister is going to meet. (Affirmative)
உனது சகோதரி சந்திக்கப் போகின்றாள். (உடன்பாடு)

(ஈ) Is your sister going to meet? (Interrogative)
உனது சகோதரி சந்திக்கப் போகின்றாளா? (வினா)

(இ) Your sister is going to meet the principal.
உனது சகோதரி அதிபரைச் சந்திக்கப் போகின்றாள்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஈ) Is your sister going to meet the principal?
உனது சகோதரி அதிபரைச் சந்திக்கப் போகின்றாளா?
(வினா வாக்கியம் - Interrogative)

---

(உ) Your father is going to do. (Affirmative)
உனது தந்தை செய்யப் போகின்றார். (உடன்பாடு)

(ஊ) Is your father going to do? (Interrogative)
உனது தந்தை செய்யப் போகின்றாரா? (வினா)

(உ) Your father is going to do this work.
உனது தந்தை இந்த வேலையைச் செய்யப் போகின்றார்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஊ) Is your father going to do this work?
உனது தந்தை இந்த வேலையைச் செய்யப் போகின்றாரா?
(வினா வாக்கியம் - Interrogative)

---

(எ) Your mother is going to blame. (Affirmative)
உனது தாய் குறைகூறப் போகின்றார். (உடன்பாடு)

(ஏ) Is your mother going to blame? (Interrogative)
உனது தாய் குறைகூறப் போகின்றாரா? (வினா)

(எ) Your mother is going to blame me.
உனது தாய் என்னைக் குறைகூறப் போகின்றாள்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஏ) Is your mother going to blame me?
உனது தாய் என்னைக் குறைகூறப் போகின்றாரா?
(வினா வாக்கியம் - Interrogative)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# பிரிட்டனின் புதிய அரசாங்கத்தின் நிதித்திட்டமிடலில் மாற்றங்கள்





பிரிட்டனில் அண்மையில் ஆட்சியை இழந்த தொழிற்கட்சியின் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த, 11.5 மில்லியன் பவுண்ட்ஸ் மதிப்பிடப்பட்டுள்ள 12 அபிவிருத்தித் திட்டங்களைக் கைவிடுவதற்கும் புதிய நிதித் திட்டமிடல் கொள்கையொன்றை வகுப்பதற்கும் அந்நாட்டின் புதிய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற அமர்வுகளின் போது இதுபற்றி உரையாற்றிய பிரதமர் டேவிட் கெமருன் செலவுகளைக் குறைப்பதற்காகவே மேற்படி நடவடிக்கைகளை தாம் எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

பிரதமர் கெமருனின் இந்தத் தீர்மானத்தை வெகுவாக வரவேற்றுப் பாராட்டியுள்ள பிரிட்டன் ஊடகங்கள் முன்னைய ஆட்சிக் காலத்தில் காணப்பட்ட பல சிக்கல்களை புதிய பிரதமரின் ஆட்சி சிறப்பாக தீர்த்து வைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளன. புதிய நிதித்திட்டமிடல் கொள்கையின் மூலம் நூறு கோடிக்கும் மேற்பட்ட பவுண்ட்ஸ்களை சேமிக்கமுடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# சிம்பாப்வேயின் அரசியலமைப்பில் மாற்றம் செய்யப்படவுள்ளது

சிம்பாப்வேயில் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர், அரசியலமைப்பு முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அந்நாட்டின் கூட்டரசாங்கத்தின் தலைவர்கள் இணக்கம் கண்டுள்ளனர்.

பிரிட்டனின் ஆளுகைக்குள் இருந்த சிம்பாப்வேக்கு 1980 ஆம் ஆண்டில்தான் சுதந்திரம் கிடைத்தது. அன்று தொடக்கம் இன்று வரை பழைய அரசியலமைப்பு முறையே சிம்பாப்வேயில் பின்பற்றப்பட்டு வந்தது.



இதேவேளை, புதிய அரசியலமைப்பு முறையொன்றை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி ரொபர்ட் முகாபேயும் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவருமான மோர்கன் ஸ்வாங்கிராய்யும் இணங்கியுள்ளமை விசேட அம்சமாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## ஈரானின் ஏவுகணை வல்லமை



ஐரோப்பாவிற்கு நூற்றுக்கணக்கிலான ஏவுகணைகளை ஏவக்கூடிய வசதிகளை ஈரான் கொண்டிருப்பதாக அமெரிக்காவின் போர் திணைக்களமான 'பென்டகனின்' மூத்த அதிகாரியான ரொபர்ட் கேட்ஸ் என்பவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பாதுகாப்புச் செயலாளரும் இக்கருத்தினை உறுதிப்படுத்தியுள்ளார். இதன்படி, அமெரிக்காவின் ஏவுகணை பாதுகாப்புத் திட்டத்திலும் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**அற்லஸ் கேள்வி - 262**

**கேள்வி:** சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர் சிம்பாப்வே எந்த நாட்டின் ஆளுகைக்குள் இருந்தது?

சரியான விடை.................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 262,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 260 இன் சரியான விடை: தொழிற்கட்சி**

**பரிசு பெறுவோர்**

சுதாகரன் பிரணவசுதன்,
மூளாய் வீதி, சங்கானை,
வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.

எஃப்.ரிஸ்ஃபியா,
175/48, வொக்ஷால் வீதி,
கொழும்பு-02.

எம்.சுக்ரி,
3A, வனாப்புவ, தெல்தொட்ட.






**01. சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகள் 2010 இல் தெ.ஆபிரிக்காவில் நடைபெறுகிறது. FIFA எனப்படும் இந்த விளையாட்டு சம்பந்தமான பின்வரும் கூற்றுகளில் பிழையான கூற்று எது?**

i. சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டது 1930 இல் ஆகும்.
ii. இதுவரை உலக கிண்ணத்தை அதிகளவில் கைப்பற்றிய நாடு பிரேஸிலாகும்.
iii. கால்பந்தாட்டப் போட்டிகளில் லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க நாடுகள் ஆசிய, அவுஸ்திரேலிய நாடுகளைவிட முன்னணியில் உள்ளன.
iv. போட்டியொன்றில் சீனா மட்டுமே ஆசியாவிலிருந்து வெற்றி பெற்ற நாடாகும்.
v. பிரேசில் நாட்டைச் சேர்ந்த பேலே எனும் உதைபந்தாட்ட வீரர் 1254 போட்டிகளில் கலந்துகொண்டு 1216 கோல்களைப் போட்டு சாதனை படைத்துள்ளார்.

**02. இலங்கையில் நடைமுறையிலுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறை சம்பந்தமாக பின்வரும் கூற்றுக்களில் பொருத்தமற்ற கூற்று எது?**

i. 1978 ஆம் ஆண்டின் யாப்பு முறையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்துடன் விகிதாசார பிரதிநிதித்துவ முறை அறிமுகம் செய்யப்பட்டது.
ii. இத்தேர்தல் முறை ஜேர்மனி, இஸ்ரேல் போன்ற நாடுகளிலும் நடைமுறையில் உள்ளது.
iii. விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையால் ஸ்திரனமான அரசாங்கமொன்றை உருவாக்க முடியாது.
iv. விகிதாசார பிரதிநிதித்துவ முறை விருப்பு வாக்குகள் மூலம் 196 பேர் இலங்கை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுகின்றனர்.
v. விகிதாசார பிரதிநிதித்துவம் சிறுபான்மையினருக்கு சாதகமான தேர்தல் முறையாகும்.

**03. பின்வரும் கூற்றுகளில் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சரியான கூற்று எது?**



i. வாக்காளர்களின் சாதாரண பெரும்பான்மையால் தெரிவு செய்யப்படல்.
ii. தேசிய வாக்குகளின் சாதாரண பெரும்பான்மையாலும் மாநில பிரதிநிதிகள் தேர்தல் கழகத்தின் சாதாரண பெரும்பான்மையாலும் தெரிவு செய்யப்படல்.
iii. மாநிலப் பிரதிநிதிகள் தேர்தல் கழகத்தின் சாதாரண பெரும்பான்மையினால் தெரிவு செய்யப்படல்.
iv. மாநில ஆளுனர்களின் சாதாரண பெரும்பான்மையினால் தெரிவாதல்.
v. தேசிய வாக்குகள், மாநில ஆளுனர் வாக்குகள் சாதாரண பெரும்பான்மையினால் தெரிவு செய்யப்படல்.

**04. பொது மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போனமையால் தனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்த தலைவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**



i. ஜப்பான் ii. தாய்லாந்து iii. கியூபா
iv. நேபாளம் v. பிலிப்பைன்ஸ்

**05. இஸ்ரேல், பலஸ்தீன உறவில் தற்போதைய நெருக்கடிகளுக்கான உடனடிக் காரணமாகக் கருதப்படக்கூடிய நிகழ்வு**




i. கிழக்கு ஜெருசலத்தில் குடியேற்றம்
ii. இஸ்ரேல் அடிக்கடி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடல்.
iii. இணக்கப்பாடில்லாத மனப்பாங்கை இரண்டு நாடுகளின் தலைமைத்துவமும் கொண்டிருத்தல்.
iv. உதவிப் பொருட்களுடன் சென்ற கப்பலை இஸ்ரேல் தாக்கி 7 பேர் இறந்துள்ளமை.
v. இஸ்ரேலின் அடாவடித்தனங்களை மேற்கு உலகம் கண்டுகொள்ளாமை.

**06. 2010.06.07 இல் இந்தியாவில் வழக்குத் தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டது. இது மனிதகுல வரலாற்றில் மிக முக்கியமானது. அந்த வழக்கானது 26 வருடம் விசாரிக்கப்பட்டு 2 வருட தண்டனையாகத் தீர்ப்பு வழங்கப் பட்டது. இத்தீர்ப்பானது, பூச்சுக்கொல்லி மருந்து தயாரித்த யூனியன் காபைட் கம்பெனிக்குரிய சரியான தண்டனை அல்லது தீர்ப்பாக அமையவில்லை. கீழ்வரும் கூற்றுகளில் இது சம்பந்தமான பிழையான கூற்று எது?**

UNION CARBIDE

i. 1984 இல் போபால் நகரில் அணுஉலை வெடிப்பு ஏற்பட்டது.
ii. போபால் அணுஉலை வெடிப்பால் 3000 பேர் அதே இடத்திலும் பின்னர் மொத்தமாக 15 ஆயிரம் பேர் வரை இறந்ததோடு, 1 லட்சம் பேர் பாதிக்கப்பட்டனர்.
iii. யூனியன் காபைட் கோர்ப்பரேஷன் தலைவர் தலைமறைவாக உள்ளார்.
iv. தண்டனை வழங்கப்பட்ட 8 பேரில் யூனியன் காபைட் தலைவர் இல்லை.
v. இது 'சேர்னோபில்' நகரில் நடந்த அணு உலை வெடிப்பு வழக்கின் தீர்ப்பாகும்.

**07. கிரிக்கெட் ஆட்டக்காரர்களில் டெஸ்ட் போட்டிகளில் கூடிய சதங்கள், ஓட்டங்களை எடுத்து உலக சாதனையை ஏற்படுத்திய வீரர்.**



i. சனத் ஜயசூரிய
ii. சயிட் அஃப்ரிடி
iii. சச்சின் டெண்டுல்கார்
iv. ரிக்கி பொன்டிங்
v. மகேந்திரசிங் தோனி (தொடரும்)

**கடந்த வார கேள்விகளுக்கான விடைகள்**

| | |
|---|---|
| 1 - v | 5 - iv |
| 2 - iv | 6 - iv |
| 3 - iv | 7 - ii |
| 4 - v | 8 - iv |

(கேள்வித்தாளில் iv என்பதற்குப் பதிலாக vi என தவறாக பிரசுரிக்கப்பட்டிருந்ததை கவனத்தில் கொள்ளவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் வீதி ஓட்டம் யாழ்.நகரில்




ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 23 ஆம் திகதி அனுஷ்டிக்கப் படுகின்ற ஒலிம்பிக் தினத்தை முன்னிட்டு நடைபெறுகின்ற வீதி ஓட்டம், கடந்த 23 ஆம் திகதியன்று யாழ்ப்பாண நகரிலும் நடைபெற்றது. யாழ்.துரையப்பா விளையாட்டரங் கிற்கு சமீபமாக ஆரம்பமாகிய இந்த வீதி ஓட்டம் நான்கு கி.மீற்றர் தூரத் திற்கு சென்று மீண்டும் அதே இடத்தை வந்தடைந்தது.

தேசிய ஒலிம்பிக் சம்மேளனத்தி னால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வீதி உலா இந்த முறை முதல் தட வையாகவே யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றமை குறிப்பிடத் தக்கது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆயிரத் திற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் பங்களிப்பிற்கான ஊக்குவிப்பு சான்றிதழும் வழங்கப்பட்டன.

# 'றக்பி' போட்டியில் புனித பீட்டர்ஸ் செம்பியன்






அகில இலங்கை பாடசாலை மட்டத்திலான சிங்கர் கிண்ண றக்பி இறுதிப் போட்டியில் கொழும்பு, பம்பலப்பிட்டி சென். பீட்டர்ஸ் கல்லூரி, 24-15 என்ற புள்ளிகள் கணக்கில் கண்டி, கட்டுகஸ்தோட்டை-புனித அந்தோனியார் கல்லூரியை வெற்றிகொண்டு செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இப்போட்டித் தொடரில் புனித பீட்டர்ஸ் அணி அனைத்துப் போட்டிகளிலும் தொடர் வெற்றிகளைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

முதல் பாதிப் போட்டி முடிவின்போது 24-03 என்ற புள்ளிகள் கணக்கில் புனித பீட்டர்ஸ் கல்லூரி முன்னணியில் இருந்த போதிலும் பின் பாதிப் போட்டியில் புனித பீட்டர்ஸ் அணியினருக்கு வாய்ப்பை வழங்காமல் புனித அந்தோனியார் கல்லூரியினர் மிகச் சிறப்பாக ஆக்ரோஷத்து டன் விளையாடியமையால், புனித பீட்டர்ஸ் அணியினருக்கு மேற்கொண்டு புள்ளிகளைப் பெறும் வாய்ப்புக் கிட்டவில்லை. இந்த இடைவெளிக்குள் புனித அந்தோனியார் அணியினர் மேலும் 12 புள்ளிகளைப் பெற்று தமது மொத்தப் புள்ளி களை 15 ஆக உயர்த்திக் கொண்ட போதிலும், 24-15 என்ற புள்ளிக் கணக்கில் புனித பீட்டர்ஸ் கல்லூரி செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

# பல்கலைக்கழக 'பேஸ்போள்' உலகக் கிண்ணப் போட்டிகள்



இலங்கை உட்பட மேலும் பல நாடுகளையும் சேர்ந்த பல்கலைக் கழக மட்டத்திலான உலகக் கிண்ண பேஸ்போள் (Baseball) போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி வரை ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெறவுள்ளது.

இலங்கை பல்கலைக்கழகங்களின் 'பேஸ்போள்' அணிகளைச் சேர்ந்த 21 பேர் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளதுடன், இலங்கையின் 'பேஸ்போள்' தேசிய அணியின் வீரர்கள் சிலரும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள மையும் குறிப்பிடத் தக்கது.

ஜப்பானைச் சேர்ந்த யஷூமா என்பவரே இந்த அணிகளுக்குப் பயிற்றுனராக கடமையாற்றவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 'மெட்ரிட்' டென்னிஸில் நடால் செம்பியன்



**ஸ்பெயினில் நடைபெற்ற 'மெட்ரிட்' பகிரங்க டென்னிஸ் போட்டிகளில் செம்பியன் கிண்ணத்தை ஸ்பெயினின் டென்னிஸ் வீரர் ரஃபாயல் நடால் கைப்பற்றியதுடன், மீண்டும் தானே முதல் நிலை வீரர் என்ற சாதனையையும் தக்க வைத்துக்கொண்டார்.**

**கடந்த முறை இப்போட்டிகளில் செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிய ரொஜர் ஃபெடரர் இம்முறை இறுதிப் போட்டியில் நடாலுடன் போட்டியிட்டதிலேயே நடால் வெற்றியீட்டினார்.**

**இந்த வெற்றியின்மூலம் உலகிலேயே அதிக தடவைகள் 'மாஸ்டர்ஸ்' கிண்ணத்தை வெற்றியீட்டியவர் என்ற பெருமையையும் நடால் பெற்றுள்ளார்.**

**இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்த ஃபெடரர் தரவரிசைப் பட்டியலில் மூன்றாம் இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.**

**இதேவேளை, மகளிர் டென்னிஸ் தரப்படுத்தல் பட்டியலில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் 8475 புள்ளிகளுடன் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.**

# ஆஸி, இங்கிலாந்து அணிகளுடன் பாகிஸ்தான்

இங்கிலாந்தில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கெதிராக போட்டியிடவுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் சொஹெப் அர்தர் மற்றும் யூனிஸ்கான் ஆகிய இரண்டு பேரும் இடம்பெறவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலியாவுடன் இரண்டு 20/20 போட்டிகளிலும், இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் போட்டியிடவுள்ளது.

இந்த போட்டிகளையடுத்து இங்கிலாந்துடன் இரண்டு 20/20 போட்டிகளிலும், நான்கு டெஸ்ட் போட்டிகளிலும், ஐந்து ஒருநாள் போட்டிகளிலும் பாகிஸ்தான் அணி போட்டியிடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்கலாமா?




மாணவர்களை சமூகத்துக்கு சிறந்த பிரஜைகளாக வெளிக்கொண்டு வருபவர்கள் ஆசிரியர்களே! ஆசிரியர்கள் எமது பெற்றோரைப் போன்றவர்கள். நாம் தவறு செய்யுமிடத்து பெற்றோர் எம்மைத் தண்டிக்கிறார்கள். அவ்வாறே, எமது முன்னேற்றத்துக்காகச் செயற்படும் ஆசிரியர்களும் எம்மைத் தண்டிக்கலாம். அத்தண்டனைகூட எமது நல்வளர்ச்சிக்கான உரமாகவே இருக்கும்.

***-ஃபர்வின் ஃபாரிஸ், கொடேகொட மு.வித்., ஹெம்மத்தகம.***

தாய் என்ற உறவின் பின் அனைவருக்கும் கிடைப்பது 'ஆசான்' என்ற உறவே.எனவே, தப்புச் செய்தவன் தண்டனை பெறுவது தான் நியாயமாகும். எனினும், கடுமையான முறையில் நடந்து கொள்வதுதான் தவறு. முதலில் பாசத்தின் மூலம் அவர்களைப் பணிய வைக்கவேண்டும். அது முடியாத பட்சத்தில் தவறிழைத்த மாணவனை ஆசிரியர் தண்டிப்பதில் எவ்வித தவறும் இல்லை.

***-பாத்திமா றிஸ்வானா ரவுஃப், ஹெம்மாதகம.***

'ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்கவேண்டும். ஆனால், மாணவர்கள் முறைதவறி நடந்தால் மாத்திரமே தண்டிக்கவேண்டும்'

***-எம்.சிஃப்ரான், குருணாகலை.***

ஆசிரியர் மாணவரை வீணாகத் தண்டிப்பதில்லை. மாணவர்கள் மீண்டும் குற்றங்களைச் செய்யாதிருப்பதையே ஆசிரியர்கள் விரும்புகின்றனர். எனவே, ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிப்பது நீதியானது என்பதே எனது வாதம்.

***-ஏ.ஏ.எம்.அக்ரம், மாத்தளை.***

தற்போது பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தண்டித்தால் சட்டெனக் கோபம் வந்துவிடும். அதனால், மாணவர்களுக்கு ஆசிரியர்கள் மீது மதிப்புக் குன்றிவிடலாம். உரிய பாடத்தைக் கற்பதில் கவனம் செலுத்தவும் மாட்டார்கள். இதனால், ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிப்பதைக் குறைத்துக்கொள்வது நன்று. அதேநேரம் மாணவர்களை முற்றாகத் தண்டிக்காமலும் இருந்து விடக்கூடாது. அவ்வாறு செயற்படின் அது ஆசிரியர் தொழிலை அவமதிக்கும் விதத்தில் அமைந்துவிடும்.

***-ஆர்.அஹ்ஸன், ரம்புக்கனை.***

ஆசிரியர் என்பவர் உண்மையில் நமது நலனுக்காக, நமது எதிர்காலத்துக் காக, துணைபுரியும் ஒரு முக்கிய வழிகாட்டியாவார். மாணவர்களின் நலனுக்காகவே ஆசிரியர்கள் அவர்களை தண்டிக்கின்றனர். எனினும், ஆசிரியர்கள் தண்டனை கொடுக்கும்போது மாணவர்கள் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்குக் கொடுப்பதுதான் தவறாகும்.

***-ஆர்.ரிஸா உல் கரீம், பாதுக்கை.***

ஆசிரியர்கள், மாணவர்களைப் படிப் பிற்காகவும் குற்றத்திற்காகவும் தண்டனை வழங்கி நல்வழிப்படுத்தியது அந்தக்காலம். இந்தக்காலம் கலியுககாலம். மாணவர்களைத் தண்டித்து, நல்வழிப்படுத்த ஆசிரியர்கள் முனைந்தால், மாணவர்களின் பெற்றோர்களே, ஆசிரியர்களைத் தண்டிக்க முனைவது இந்தக்காலம்.

***-க.கனகசபை, கலாஜோதி புத்தக நிலையம், பிரதான வீதி, சங்கானை.***

மாணவன் என்ற வகையில் ஒரு சில தவறுகள் ஏற்படலாம். அத்தவறுகளைச் சுட்டிக்காட்டி அவர்களைத் தண்டிக்கலாம். தண்டிப்பதன் மூலம் அத்தவறை அவர்கள் மீண்டும் ஒருமுறை செய்ய முற்படமாட்டார்கள். நல்ல மாணவர்களைக் கொண்டு ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாகலாம். அதற்கான அத்திவாரம் பாடசாலையில்தான் இடப்படல் வேண்டும். எனவே, மாணவர்கள் செய்த தவறை ஆராய்ந்த பின்னர் தண்டிக்கலாம்.

***-ஷமிலா நஸீர், மல்வானை.***

(மிகுதி அடுத்தவாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்குக்கொம்பன்

**காண்டாமிருகம் (Rhinoceros) பாலூட்டி வகையைச் சார்ந்த ஒரு விலங்கினமாகும். இதை மூக்குக்கொம்பன், ஒற்றைக்கொம்பன், மூக்கின்மேல் கொம்புள்ள பிராணி என்று பல்வேறு பெயர்களால் அழைப்பர். கிரேக்க மொழியில் 'rhino' என்றால் மூக்கு என்றும் 'ceros' என்றால் கொம்பு என்றும் பொருள்படும்.**



தனித்து அல்லது சோடியாக வாழ்கின்ற காண்டாமிருகம், பிற விலங்கினங்களைத் தாக்கக்கூடிய விலங்குபோல் காட்சியளித்தாலும் மிகவும் பயந்த சுபாவமுள்ள ஒரு சாதுவான மிருகமாகும். எனினும், தன்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டால், வெறியுடன் எதிர்த்துத் தாக்கக்கூடியது.

## உடல் அமைப்பு

இது தடிப்பானதும் கெட்டியானதுமான தோலைக் கொண்டிருக்கின்றது. தோலில் குட்டையான மயிர்களைக் காணலாம். சிறிய கண்களைக் கொண்டிருப்பதோடு, அக்கண்கள் மங்கலான சூரிய ஒளியிலும் எதையும் தெளிவாகக் காணக்கூடியவை. அத்துடன், இவற்றின் கண்கள் கிட்டப்பார்வையைக் கொண்டுள்ளன.எனினும்,தனக்கு முன்னால் காணப்படும் எதனையும் இவற்றால் தெளிவாகக் காணமுடியாது. மாறாக, முகரும் உறுப்பும் கேட்கும் உறுப்பும் மிகச் சிறப்பாகச் செயற்படுவதால், எதிரிகளைத் தூரத்தில் இருந்தே தெரிந்துகொள்கின்றன.

வாய்ப்பகுதியின் மேலுதடு, பொருட்களை வளைத்துப் பிடிக்க ஏற்றாற்போல் நீண்டும் நுனியில் கூர்மையாகவும் அமைந்துள்ளது. இதன் கால்கள் குட்டையாக இருப்பதோடு, ஒவ்வொரு காலிலும் மும்மூன்று விரல்கள் காணப்படுகின்றன. அத்துடன், காண்டாமிருகத்தின் வால் குட்டையாகவும் உடல் பீப்பாய் போன்றும் காட்சியளிக்கும். இவற்றிற்கு கோரைப் பற்கள் காணப்படுவதில்லை.

## கொம்பு

காண்டாமிருகத்திற்கு தனிச்சிறப்பைக் கொடுப்பது அதன் கொம்புதான் என்றால் மிகையில்லை. ஒன்று அல்லது இரண்டு கொம்புகள் இவற்றின் மூக்கின் மேல் ஒன்றன்பின் ஒன்றாக உள்ளன. இக்கொம்புகள் எலும்புகளால் ஆனவையல்ல; கெரடின் (Keratin) எனப்படுகின்ற கொம்முறை அல்லது நகமஞ்சளம் என்று அழைக்கப்படும் பொருளால் ஆனவை. கொம்புகள் இல்லையேல் இவை வலிமையற்றுக் காணப்படும்.


பிறந்து ஆறு ஆண்டுகளுக்கு பின்னர் அவற்றின் கொம்புகள் வெளிப்படும். வயதுவந்த பெரும்பாலான காண்டாமிருகங்களுக்கு கொம்பு ஏறத்தாழ 25 செ.மீ நீளம் வரை வளரும். அதிகபட்ச நீளம் 57.2 செ.மீ எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன் கொம்புகள் கறுப்பு நிறத்தை கொண்டவை. விலங்கினக் காட்சிசாலைகளில் உள்ள விலங்குகளுக்கு காட்டில் வாழும் காண்டாமிருகங்களுக்கு இணையாக கொம்புகள் வளர்வதில்லை. காண்டாமிருகங்களின் கொம்புகள் மிக விலைமதிப்புள்ளதால், கொம்புகளுக்காக அவை வேட்டையாடப்படுகின்றன. இதனால், இவற்றின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகின்றது. அரேபிய மக்கள் இக்கொம்புகளைத் துப்பாக்கி, வாள் மற்றும் போர்க் கருவிகளின் கைப்பிடிகளாகப் பயன்படுத்துகின்றனர். ஆசியாவில் சில நாடுகளில் காண்டாமிருகத்தின் கொம்பிலிருந்து தலைவலி, டைஃபோய்ட் காய்ச்சல் உட்பட பல நோய்களுக்கான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.


அலங்காரப் பொருட்கள்


போர்க்கருவிகளுக்கான கைப்பிடிகள், கவசம்


மருந்து வகைகள்

கொம்புகள் பழுதடைந்தால் அல்லது வெட்டுப்பட்டால் அவை மீண்டும் வளர்ந்து பழைய நிலைக்குவர சுமார் மூன்று ஆண்டுகள் வரை செல்கின்றன. காண்டாமிருகங்கள் தமது கொம்புகளை தற்காப்புக்காகவும் புதர்களையும் சிறிய மரங்களையும் வேரோடு சாய்க்கவும் பயன்படுத்துகின்றன. அத்துடன், காண்டாமிருகங்களை கொம்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.


கறுப்புக் காண்டாமிருகம்


வெள்ளைக் காண்டாமிருகம்

### 1. ஒற்றைக் கொம்புள்ள காண்டாமிருகம்

இவை இந்தியாவில் அஸாம் மாநிலத்திலும் நேபாளத்திலும் காணப்படுகின்றன. இவற்றை ரைனோசரஸ் இன்டிகஸ் (Rhinoceros indicus) என்பர். இவை உருவத்தில் பெரியவையாகக் காணப்படுவதுடன்,ஏறக்குறைய ஆறடி வரையான உயரத்தையும் கொண்டுள்ளன. அத்துடன், பார்ப்பதற்கு அருவருப்பான தோற்றத்தையும் கொண்டுள்ளன. கழுத்து, மார்பு மற்றும் தொடைப்பகுதிகளில் தோல் மடிப்புகள் உள்ளன. தோல் மடிப்புகளின் மேற்பரப்பில் முள் போன்ற மொட்டுகள் காணப்படுகின்றன. இதனால், இவற்றை முன்புறமாக வந்து தாக்குவதற்கு அஞ்சும் எதிரிகள், பின்புறமாக வந்து மறைந்திருந்தே இவற்றைத் தாக்குகின்றன.

### 2. இரண்டு கொம்புகள் உள்ள காண்டாமிருகம்

தென்கிழக்காசியாவின் சுமாத்ரா பகுதியில் அதிகமாக வாழும் இவற்றை ரைனோசரஸ் சுமாத்ரென்ஸிஸ் (Rhinoceros Sumathrensis) என அழைப்பர். இவற்றில் இரண்டு கொம்புகள் ஒன்றன்பின் ஒன்றாக மூக்கின் மேல் உள்ளன. சுமாத்ரா பகுதியை தவிர, கிழக்கு ஆபிரிக்காவிலும் தெற்கு ஆபிரிக்காவிலும் இவ்வகை காண்டாமிருகங்கள் உள்ளன. இவை இலைகளையே உண்டு வாழ்கின்றன.

## உணவு

இவ்விலங்கு புல், இலை,பழங்கள் மற்றும் நீர்ச்செடிகளை உண்கிறது. இவை காலை மற்றும் மாலை நேரங்களில் மேயும். இதன் முகத்தின் மேல்தட்டையை வைத்து புதர்களில் உள்ள புற்களை மடக்கி, பின் மென்று உண்ணும் பழக்கத்தைக் கொண்டதாகும். தாய் விலங்குகள் சில சமயங்களில் குட்டிகளுக்கு ஏற்றவாறு புற்களையும் புதர்களையும் காலால் அல்லது உடலால் அழுத்தி மடக்கிக் கொடுக்கும். இவ்விலங்கு பெரும்பாலும் தன் சிறுநீர் கலந்த நீரையே பருகுகின்றன.

## கறுப்பு-வெள்ளை

காண்டாமிருகத்தை நிறத்தின் அடிப்படையிலும் இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று,வெள்ளைக் காண்டாமிருகம்; மற்றையது கறுப்புக் காண்டாமிருகம். வெள்ளைக் கண்டாமிருகத்தின் உதடு சதுரமாக இருக்கும். கறுப்புக் காண்டாமிருகத்தின் உதடு கொக்கி போல் காணப்படும். இருவகைக் காண்டாமிருகங்களுக்கும் கொம்புகள் உண்டு.

-(அ)


வேட்டையாடப்பட்ட விலங்கொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைக்க — 1







தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.07.07 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 267**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## சரியான விடையில் கோடிடுக — 4

1. கீழிருந்து மேலாக மூடும் வகையில் இமைகள் அமையப்பெற்றுள்ள பறவை;
   (அ) பறக்கும் மீன் (ஆ) கோழி
2. 'நாடகவியலின் தந்தை' என்று சிறப்பித்துக் கூறப்படுபவர்;
   (அ) ஹெம்லட் (ஆ) வில்லியம் ஷேக்ஸ்பியர்
3. அடக்கம் உடையார் அறிஞர்; அடங்காதவர்............
   (அ) கல்லார் (ஆ) கள்வர்

## விடையளிக்க — 3



## குழம்பியுள்ள சொற்களை ஒழுங்கமைத்து, கருத்துள்ள வாக்கியங்களைப் பெறுக — 5

1. காவலர்களே/நியூசிலாந்து/இல்லாத/நாடு/போக்குவரத்துக்

.............................................................................

2. உள்ளன/80 ஆயிரம்/நத்தைகளில்/வகைகள்

.............................................................................

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 264 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ச.சவுந்தரி,
12/1, புனித லூர்து மாவ.,
சிலாபம்.

**போட்டி: 02**
க.துஷாரா,
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

**போட்டி: 03**
யூ.பிளற்றன்,
19, சென்.ஜேம்ஸ் வீதி.,குருநகர்.

**போட்டி: 04**
எம்.ரிபாஸ்,
60, வாடியதன்ன,ஹெம்மாதகம.


**போட்டி: 05**
எம்.அப்ஷான், 59, பிரதான வீதி,தெஹியோவிட.

### பாராட்டுப் பெறுவோர்

- எம்.சியாமளன், பொகவந்தலாவ.
- எஃப்.இபாஹ், வாழைச்சேனை-05.
- எம்.தாலிஃப், கொழும்பு-02.
- கே.ஸமானி, கம்பளை.
- சேம், கினிகத்ஹேனை.
- க.கிருஷ்யாயினி, பருத்தித்துறை.
- எம்.சிப்றாஸ், வாழைச்சேனை.
- எஸ்.மேனகா, மாத்தளை.
- எஃப்.அப்லிஹா, தர்கா நகர்.
- அ.ருபிகா, சுழிபுரம்

## அறிவுக்கு விருந்து 264 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 02**




**போட்டி: 04**

1. 241
2. 18
3. XC

**போட்டி: 05**

1. ஆறிலும் சாவு; நூறிலும் சாவு.
2. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்?

## வித்தியாசங்களில் √ அடையாளமிடுக — 2






'**ரி**ங்லிங் பிரதர்ஸ் சர்க்கஸ் அருங்காட்சியகம்' என்ற பகுதி எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சிறுவர்கள் அனைவரும் இந்தப் பகுதியை ஆவலோடு வாசித்திருப்பார்கள்.

**-எம்.ஃபயாஸ், தரம்-8., நா.மு.ம.வித்., நாச்சியாதீவு.**

'**தே**ன்' பற்றிய கட்டுரை பயனுள்ள பல விடயங்களை உள்ளடக்கியிருந்தது. 'தந்தையர் தினம்' ஆக்கம் ஒவ்வொரு குடும்பத்தலைவரதும் பொறுப்பு, கடமை என்பனவற்றை எடுத்துக் காட்டியுள்ளதோடு, கௌரவப்படுத்தியும் உள்ளது. மற்றும் திசையறி கருவி, விளாம்பழம் தொடர்பான கட்டுரைகளும் சிறப்பானவை.

**-பொ.கிருபராசா, உடையார் வீதி, கல்முனை-02.**

'**ப**ழைமைமிகு புதைகுழிகள்' எனும் கட்டுரை அறிவுக்கு விருந்தாக அமைந்தது. 'விஜய்'க்கு நிகர் எதுவுமில்லை.

**-அஸ்வின்காந், தரம்-$6^B$, கொ.த.ம.வித்., கொட்டகலை.**

**க**ல்வி முகாமைத்துவம், விவாத மேடை, டைனோசர் கட்டுரை என்பன சிறப்பானவை. உயர் தர மாணவர்களுக்கான பொது சாதாரண வினாத்தாள் பற்றிய அறிவிப்பானது, 'ஆரோக்கியத்திற்கு அருமருந்தாக தேன்' இருப்பது போல அனைத்து உயர் தர மாணவர்களுக்கும் பயனளிக்குமென நம்புகின்றேன்.

**-பா.கபில்நாத், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.**

'**டை**னோசர்கள் எவ்வாறு அழிந்தன?' என்பது பற்றி பல தகவல்களைப் பெற்றுக்கொண்டேன்.

**-மஷ்ரிபா நஸீம், யோனகபுர, திக்குவல்லை.**

'**ஐ.**நா விபரங்கள்' மிகவும் பயனுள்ளதாக இருந்தன. 'விவாத மேடை' களைகட்டுகிறது.அத்துடன், இது மாணவர்களின் சிந்தனா சக்தியை விருத்தி செய்வதாகவும் உள்ளது.




**-கே.சுதர்சன், தரம்-9, த.ம.ம.வித்., வவுனியா.**

'**டை**னோசர்கள் எவ்வாறு அழிந்தன?' என்ற ஆக்கம் பயனுடையதாக அமைந்திருந்தது. க.பொ.த (உ/தர) மாணவர்களுக்கான பொது சாதாரண மாதிரி வினாத்தாளைப் பிரசுரிக்கும் ஏற்பாடு மிகவும் நன்று. அவ்வாறே, (சா/தர) மாணவர்களுக்காகவும் வினாத்தாள்களைப் பிரசுரித்தால் வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

**-எஃப்.ஃபர்வின், தரம்-11, கொடேகொட மு.வித்., ஹெம்மாதகம.**

**அ**னைத்து விடயங்களும் அற்புதம். ஆங்கில மொழிப்பயிற்சி, சிங்களம் கற்போம் ஆகிய பகுதிகள் எனக்கு மிகவும் பிடித்தமானவை.

**-ஆர்.பர்வின், சென்னல் கிராமம்-01, சம்மாந்துறை.**

'**ம**களின் கேள்விக்கு விடை தேடிய தாய்', 'சீனாவின் மஞ்சள் மலை', 'மகளிருக்கான சாரணியர் இயக்கம்', 'இவர்தான் என் தந்தை' போன்ற ஆக்கங்கள் சிறப்பானதாகவும் பயனுடையதாகவும் அமைந்திருந்தன.

**என்.அய்மா, மருதமுனை.**

'**தே**ன் இனிக்கும் என்று மட்டும்தான் இதுவரை எனக்குத் தெரியும். ஆனால், அது பல்வகை நோய்களுக்கு அருமருந்தாக இருப்பது 'விஜய்' பத்திரிகை மூலமாகத்தான் அறிக்கூடியதாக இருந்தது.

**-க.அபிராமி, யாழ்ப்பாணம்.**

**இந்த இதழில் (30.06.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**
**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 07.07.2010..**

**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.வரலாற்றில் சங்கிலி மன்னன்



வரலாற்றுத் தொடர்... 01

அரியாலையூர் சி.சிவதாசன்

**யாழ்ப்பாண அரசின் கடைசித் தமிழ் மன்னனான சங்கிலி (ஏழாம் செகராசசேகரன்) கி.பி 1519 ஆம் ஆண்டு முதல் கி.பி 1561 ஆம் ஆண்டு வரை நல்லூரைத் தலைநகராகக் கொண்டு நல்லாட்சி செய்தான். போர்த்துக்கேயரை பலமுறை போரில் வெற்றி கண்ட இம்மன்னனைப் போர்த்துக்கேயர் தம் வரலாற்றில் 'கொலைப்பாதகன்' என எழுதியுள்ளபோதும் தேசப்பற்றும் மதப்பற்றும் கொண்டவனாக இவன் விளங்கினான். ஈடிணையற்ற வீரனாகத் திகழ்ந்த இம்மன்னனின் வெற்றி நடவடிக்கைகளைக் குறிக்கும் முற்பகுதி வாழ்க்கை நிகழ்வுகள் வரலாற்று வடிவில் தொடராக இங்கு வழங்கப்படவுள்ளது.**

## சங்கிலியின் பிறப்பு

பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாண அரசினை நல்லூரைத் தலைநகராகக்கொண்டு பரராசசேகரன் என்னும் மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு மனைவியர் மூவர் இருந்தனர். சோழ நாட்டு மங்கையைத் தன் பட்டத்து இராணியாகக் கொண்ட இம்மன்னனுக்கு அவள் மூலம் சிங்கவாகு, பண்டாரம் ஆகிய பிள்ளைகளும், யாழ்ப்பாண மண்ணில் பிறந்த இரண்டாவது மனைவி மூலம் பரராசசிங்கன், பரநிருபசிங்கன் உட்பட நான்கு பிள்ளைகளும் அழகு மிகக்கொண்ட மூன்றாவது மனைவியான மங்கத்தம்மாளுக்கு சங்கிலி என்ற பிள்ளையும் பிறந்தன.

இளமைப் பருவம் கொண்ட பிள்ளைகள் வில்வித்தை, வாள்சண்டை, சிலம்புச்சண்டை, வேற்போர், யானை ஏற்றம், குதிரை யேற்றம், தேரோட்டம், யானையை அடக்குதல், மல்யுத்தம் ஆகிய கலைகளில் நீண்ட காலப்பயிற்சி பெற்றும், இலக்கியங்கள், இலக்கணங்கள், சாஸ்திரங்கள், நீதிநூல்கள், மருத்துவநூல்கள் ஆகியவற்றை முறையாகக் கற்றும் பல்துறை வல்லவர்களாக விளங்கினர். இவர்களில் சங்கிலி அளப்பரிய திறமைசாலியாக விளங்கினான். அவனின் ஆற்றலைக் கண்டு பரராசசேகர மன்னன் அதிசயப்பட்டபோதும், மூத்த குமாரர்கள் இருக்க அவனுக்குப் பட்டங்கட்டி அரசுரிமை வழங்கமுடியாது என எண்ணி வேதனைப்பட்டான்.



மன்னரின் இரண்டாவது மனைவியின் மகன் பரநிருபசிங்கன் வைத்தியத்துறையில் பெரும் ஆற்றல் பெற்று அனைத்து வகையான நோய்களையும் குணப்படுத்தும் வல்லவனாக விளங்கினான். இருந்தபோதும் சங்கிலியின் திறமை கண்டு அவன் மனதுக்குள் தீராத பொறாமை கொண்டான். அரசியல் குருவானவர்கள், மற்றும் அனைவரும் சங்கிலியின் வலிமை கண்டு அவனைப் பெரிதும் பாராட்டினார்கள். இவன் திறமையைப் பார்க்கும்போது பரராசசேகர மன்னனுக்குப் பின் ஆட்சி செலுத்தும் தகைமை இவனிடமே உள்ளது என அவர்கள் தமக்குள் எண்ணினார்கள். அதனை மன்னனிடமும் எடுத்துக் கூறினார்கள். இதனால், மன்னன் சிந்தனை வசப்பட்டு, மூத்த புதல்வர்கள் இருக்க, இளையவன் சங்கிலிக்கு எப்படி அரச பதவி கொடுப்பது? அது நீதியல்ல. என் அரசை வழி நடத்தும் வல்லமை சங்கிலிக்கு இருந்தபோதும் அவன் அரசுரிமையற்ற பிள்ளையாகப் பிறந்துவிட்டான். ஆகவே, இது முடியாத காரியம் என மன்னன் அவர்களிடம் கூறி மனதுக்குள் மிகுந்த துயரமடைந்தான்.

(தொடரும்)

# பறக்கும் சக்திமிகு குருவினால் பிரபல்யமடைந்த பூமி சிக்கிம்



இந்தியாவின் ஒரு மாநிலமே சிக்கிம். இமயமலைத் தொடரில் அமைந்துள்ள இம்மாநிலத்தின் தலைநகர் கேங்டொக். கேங்டொக் ஒரு கனவு பூமி என்றும் அழைக்கப்படுகிறது. காரணம் இங்கு அமைந்துள்ள இயற்கை எழில்மிகு இடங்கள்தான்.

நேபாளிகள், லெப்ச்சாஸ், பூட்டியா என பல்வேறு இனமக்களாக சுமார் 50 ஆயிரம் பேர் வரை இந்நகரில் வாழ்கின்றனர். இந்த கேங்டொக் நகரம் ஒரு முக்கிய பௌத்த புனித யாத்திரைத் தளம் என உயர்ந்த பின்னரே இது மிகுந்த பிரபல்யம் அடைந்தது. அவ்வாறு இந்நகரம் பிரபல்யம் அடைவதற்குக் காரணமாகத் திகழ்ந்தவர் லாமா ட்ருப்டொப் கர்ப்போ (Lama Druptob Karpo) என்னும் ஆன்மீகக் குருவாவார். இந்த ஆன்மீகக் குரு பறக்கும் சக்திமிக்கவராக இருந்தாராம்.



இவருடைய நினைவாக என்ச்சே மொனாஸ்ட்ரி (Enchey Monastery) என்னும் பௌத்த மடாலயம் ஒன்று கேங்டொக்கில் இயங்கி வருகிறது. 200 வருட பழைமைமிக்க இந்த மடாலயத்தில் தெய்வ விக்கிரகங்கள் மற்றும் சமய சம்பந்தமான ஏடுகள் என்பன உள்ளன.

வருடந்தோறும் ஜனவரி மாதத்தில் இங்கு ச்சாம் (Chaam) என்னும் சமய நடன நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆன்மீகக்குரு லாமா ட்ருப்டோப் 1716 ஆம் ஆண்டில் தெற்கு சிக்கிமிலுள்ள மேனம் (Maenam) மலையிலிருந்து பறந்து வந்து தாம் அடைந்த இடத்தில் ஒரு சிறிய ஆசிரமத்தை நிறுவினாராம். பின்னர் சிக்யோங் துல்க்கு (Sikyong Tulkyu) வின் (1909-1910) ஆட்சிக் காலத்தில் அந்த இடத்தில் தற்போதுள்ள மடாலயம் கட்டப்பட்டது.



தற்பொழுது இங்கு 90 பிக்குகள் இருக்கின்றனர்.

கேங்டொக் நகரைச் சுற்றிலும் அடர்ந்த காடுகளும் இயற்கை அழகு மிளிரும் இடங்களும் உள்ளன. சிறிய மாநிலமான சிக்கிமில் சுற்றுச்சூழல் பராமரிப்பு, பொது சுகாதாரம், சுத்தம் என்பன மிகவும் சீராகப் பேணப்படுகின்றன. இயற்கை வளத்தைப் பேணுவதற்கென இங்கு பிளாஸ்டிக் பைகளுக்குத் தடை உள்ளது. பிளாஸ்டிக் குப்பைகளை இங்கு காணமுடியாது. உலகின் மூன்றாவது உயர்ந்த சிகரமான 'கஞ்செஞ்சுங்கா' சிக்கிம் மாநிலத்திலேயே உள்ளது. சிக்கிம் மாநிலத்துக்கும் அதன் தலைநகரான கேங்டொக்குக்கும் இவ்வாறு விசேட பல சிறப்புக்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்தையின் தோழி

இங்கிலாந்தின் கெலோவே என்ற பிரதேசத்தில் வசித்து வருகின்ற மூன்றே வயதான எயிபிலின் பார்குஸன் எனும் சிறுமி பறவைகள் மீது மிகவும் விருப்பமுடையவர். இவரது தந்தையார் பறவைகள் சரணாலயம் ஒன்றையும் நடத்தி வருகின்றார். அந்த சரணாலயத்திற்கு எதேச்சை யாக வந்த ஆந்தை யொன்று செய்திகளில் முக்கிய இடத் தைப் பிடித்து விட்டது. எப்படி யென்றால், ராட்சத அளவிலான இந்த ஆந்தை இறகை விரித்தால் அதன் ஒவ்வொரு இறகும் 6 அடி நீளம் கொண்ட தாக இருக்கின் றது. குறிப்பாக இதன் இறகு இந்த சிறுமி யின் உயரத் தைவிட இரண்டு மடங்கு நீளமா னதாகும். சரணா லயத்திலுள்ள மேற்படி ஆந்தை யின் இணைபிரி யாத தோழியாகி விட்டார் இந்தச் சிறுமி.






# புதிய 'என்டி' வைரஸ்




**✱ மைக்ரோசொஃப்ட் 'செக்யூரிட்டி எசென்ஷல்ஸ்' (Microsoft Security Essentials) என்றால் என்ன?**

வைரஸ் மற்றும் ஏனைய மென்பொருட்களிலிருந்து கணினியை பாதுகாத்துக் கொள்வதற்கு பல்வேறு வகையிலான 'என்டி வைரஸ்'கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு 'வின்டோஸ்' பாவனையைக் கொண்ட கணினிகளுக்கென மைக்ரோசொஃப்ட் நிறுவனத்தினால் விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள வைரஸ் தற்காப்பு மென்பொருளை 'மைக்ரோசொஃப்ட் செக்யூரிட்டி எசென்ஷல்ஸ் (**Microsoft Security Essentials**) என்று அழைக்கப்படுகின்றது. இதனை இணையத்தளத்தின் வழியே 'டவுன்லோட்' செய்து மிக இலகுவாக 'இன்ஸ்ட்டோல்' செய்துகொள்ள முடியும். குறிப்பாக மைக்ரோசொஃப்ட் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டவற்றிற்கு மட்டுமே இதனைப் பயன்படுத்த முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும், இந்த 'மைக்ரொசொஃப்ட் செக்யூரிட்டி எஸன்ஷல்ஸை' பயன்படுத்துகின்றவர்கள் வேறு 'என்டி வைரஸ்'கள் எவற்றையும் பயன்படுத்த வேண்டியிருக்காது.

# சீ.டி ரைட் செய்தல்

**✱ சீ.டி ரைட்டரில் (CD Writer) சீ.டி ஒன்றை ரைட் (பிரதி) செய்யும்போது, சிலவேளைகளில் இடைநடுவே செயலற்று நின்றுவிடுவதுண்டு. இதற்கான காரணம் யாது?**

அநேகமாக கூடிய வேகத்தில் சீ.டி யை ரைட் செய்வதனாலேயே இந்த நிலைமை ஏற்படுகின்றது. புதிய சீ.டி ரைட்டரில்உச்ச வேகத்தில் 'சீ.டி ரைட்' செய்யமுடியும். ஆனால், இந்த உச்ச அளவு வேகத்தைப் பாவித்தால் சீ.டி ரைட் ஆவது நின்றுவிடக்கூடும். அவ்வேளை, அந்த சீ.டியை மீண்டுமொரு முறை பயன்படுத்தி ரைட் செய்யவும் முடியாது. தரத்தில் குறைந்த சீ.டிக்களை நாம் வாங்குவதும் இதற்கு காரணமாக அமைந்துவிடுகின்றது. அவ்வாறே, மிக விரைவாக சீ.டிக்களை ரைட் செய்யும்போது சில Files செயற்படாமல் போய்விடக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன. எனவே, இதற்கான ஒரே வழி ரைட் செய்யும்போது அதி உச்ச அளவிலான வேகத்தைப் பாவிக்காமல் குறைந்த வேகத்தைப் பாவித்தலேயாகும்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, ஜூன் மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday June 30, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org